بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 10

இதழ் 28

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1447 - முஹர்ரம் 14 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - வஃபா 10 ★ 2025 ஜூலை 10

## அல்லாஹ்வின் கட்டளை

اَلْحَجُّ اَشْهُرٌ مَّعْلُوْمٰتٌ ۚ فَمَنْ فَرَضَ فِيْهِنَّ الْحَجَّ فَلَا رَفَثَ وَلَا فُسُوْقَ ۙ وَلَا جِدَالَ فِي الْحَجِّ

**பொருள்**
**ஹஜ்ஜின் மாதங்கள் நன்கு தெரிந்தவையே. ஆகவே அம்மாதங்களில் ஹஜ்ஜில் பாலுணர்வு பற்றிய பேச்சும், எவ்வித வரம்பு மீறுதலும், எவ்வித சச்சரவும் கூடாது (என்பதை நினைவில் கொள்ள வேண்டும்).**
**(அல்பக்கரா: 198)**

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஸஹாபிகளில் எவரும் முர்தத் ஆகவில்லை. ஏனைய நபிமார்களின் கூட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் ஆகியிருந்தனர். அசல் விஷயம் என்னவென்றால் தர்பிய்யத் வழங்குபவரின் ஆற்றலின் தாக்கம் இருக்கின்றது

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் பிறந்தபோது, குழந்தை பால்குடிப்பதற்கு தேவையுடையதாக இருப்பதைப் போன்று மக்காவாசிகள் இருந்தனர். அதாவது ரூபூபிய்யத் எனும் பரிபாலித்தலுக்கு தேவையுடையவர்களாக இருந்தனர். மிருகங்களைப் போன்றும் காட்டுவாசிகளைப் போன்றும் வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாயைப் போன்று பாலூட்டி அவர்களை பராமரித்தார்கள். பின்னர் ரஹ்மானிய்யத்தின் நடைமுறையை வெளிப்படுத்தினார்கள். மேலும் முயற்சிகளுக்கு எந்தப் பங்கும் இல்லாத அந்த ஏற்பாடுகளை செய்து கொடுத்தார்கள். திருக்குர்ஆன் போன்ற அருட்கொடையையும், இறைத் தூதர் (ஸல்) அவர்களைப் போன்ற முன்மாதிரியையும் அவர்களுக்கு வழங்கினார்கள். பின்னர் ரஹீமிய்யத்தின் வெளிப்பாட்டையும் காட்டிக் கொடுத்தார்கள். அதாவது, என்ன முயற்சிகள் செய்யப்பட்டனவோ அவற்றின் விளைவுகளை ஒழுங்குப்படுத்தினார்கள். அவர்களின் ஈமானை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் கிறிஸ்தவர்களைப் போன்று அவர்களை வழிகேட்டில் வீழ்ந்து விட அனுமதிக்கவில்லை. மாறாக, உறுதிப்பாட்டையும், உறுதியையும் வழங்கினார்கள். முயற்சிகளில் இந்த பரக்கத் இருக்கின்றது. அதாவது, இறைவன் உறுதிப்பாட்டை வழங்கிவிடுகின்றான். இறைத் தூதர் (ஸல்) அவர்களின் ஸஹாபிகளில் எவரும் முர்தத் ஆகவில்லை. மற்ற நபிமார்களின் சீடர்களில் ஆயிரக்கணக்கானோர் இருந்துள்ளனர். ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் சீடர்களிலோ ஒரே நாளில் ஐநூறு நபர்கள் முர்தத் ஆகிவிட்டனர். மேலும், அவர்கள் மீது பெரும் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் இருந்தது. அவர்களில் ஒருவரோ முப்பது வெள்ளிக்காசுகளை வாங்கிக் கொண்டு காட்டிக் கொடுத்து விட்டார். மற்றவரோ மூன்று முறை மறுதலித்து விட்டார்.

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம்....

## நம்பிக்கையாளர் தமது அனைத்து துவாரங்களையும் பாதுகாத்துக் கொள்கின்றார். அதாவது காதுகள் கண்கள் வாய் மற்றும் வெட்க ஸ்தலத்தையும் பாதுகாத்து கொள்கின்றார். அவர்கள் புறம்பேசுதலை கேட்பதுமில்லை. பிறரது செல்வங்களை பேராசையுடன் பார்ப்பதுமில்லை. விபச்சாரம் செய்வதுமில்லை

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அல்ஹஜ்ஜூடைய வசனம் 6 மற்றும் 7ன் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

அடுத்து நம்பிக்கையாளர் என்பவர் இந்த நிலையிலிருந்தும் மேலும் முன்னேற்றம் காண்கின்றார். மேலும், தமது அனைத்து துவாரங்களையும் பாதுகாக்கின்ற அந்த நிலையை அடைகின்றார். அதாவது காதுகள்,கண்கள், வாய் மற்றும் பிறப்புறுப்பையும் பாதுகாக்கின்றார். அவர்கள் புறம்பேசுதலை செவிமடுப்பதுமில்லை ; பிறருடைய செல்வங்களை பேராசையுடன் பார்ப்பதுமில்லை ; விபச்சாரம் செய்வதுமில்லை. ஆயினும், அவர்கள் தம் மனைவிமார்களுடன் உறவு கொள்வது ஆகுமானதாகும். அதேபோன்று அவர்கள் வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்கள். இப்படிப்பட்ட மக்கள் மீது மார்க்க ரீதியில் எந்த குற்றச்சாட்டும் இல்லை.

வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்கள் என்பதன் விளக்கம் தொடர்பாக இந்த விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, சில மக்களோ அதில் (வீட்டுப்) பணிப் பெண்களையும் இணைத்துக் கொள்கின்றனர். மேலும் சிலர் தாக்குதல் நடத்தி ஒரு பலவீனமான சமுதாயத்திலிருந்து வலுக்கட்டாயமாக கடத்தி வரப்பட்ட அடிமைகளையும் இணைத்துக் கொள்கின்றனர். பின்னர் அவர்கள் விற்கப்படுகின்றனர். சில மக்களோ இந்த சொற்களுக்கு இவ்வாறு பொருள் கொள்கின்றர்; அதாவது, ஜிஹாதில் கிடைக்கின்ற பெண்களை நிக்காஹ் செய்யாமல் வீடுகளில் வைத்துக் கொள்வது ஆகுமானதாகும் என்று பொருள் கொள்கின்றனர். ஆனால், இந்த

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம்....

## நபிமொழி

**எந்தவொரு நபர் அநீதியான ஒரு காரியத்திற்கு சாட்சியாக்கப்படுவாரோ அவர் அதனை மறுத்து விட வேண்டும்**

ஹஸ்ரத் நுஃமான் பின் பஷீர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எனது தாய் எனது தந்தையிடம் இவ்வாறு கூறினார்: நுஃமானிற்கு உங்களது செல்வத்திலிருந்து சிலவற்றை அன்பளிப்பு வழங்குங்கள். (அதனை முதலில் அன்னார் ஏற்கவில்லை). பின்னர் அன்னாருக்கு எண்ணம் வந்தது; மேலும் அன்னார் எனக்கு அன்பளிப்பு வழங்கிவிட்டார்கள். நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சாட்சியாக்காத வரை நான் மகிழ்ச்சியடைய மாட்டேன் என்று எனது தாயார் கூறினார்கள். அப்போது அன்னார் (ரலி) எனது கையை பிடித்தார்கள். மேலும், அந்நேரத்தில் நான் குழந்தையாக இருந்தேன். மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் என்னை அழைத்து சென்றார்கள். மேலும் கூறினார்கள்:

ரவாஹாவின் மகளாகிய இவரது தாயார், நான் இவருக்காக அன்பளிப்பு வழங்க வேண்டும் என்று என்னிடம் கோரிக்கை வைத்தார். அன்னார் (ஸல்) கேட்டார்கள்: தங்களுக்கு இவரைத் தவிர வேறு பிள்ளைகளும் உள்ளனரா? அதற்கு அன்னார் (ரலி), ஆம்! என்றார்கள். (நுஃமான்) கூறிவந்தார்கள்; நான் கருதுகிறேன். அன்னார் (ஸல்) கூறினார்கள்: என்னை அநீதியான விஷயத்திற்கு சாட்சி ஆக்காதீர்!

அபூ ஜுரைஸ் ஷுஃபீ அவர்களிடமிருந்து பதிவு செய்துள்ளார்கள்: நான் அநீதியான விவகாரங்களுக்கு சாட்சியாக மாட்டேன் (என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். (ஸஹீஹ் புஹாரி, தொகுதி 4, கிதாபுஷ் ஷஹாதாத்)

* * * * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**மக்கா வெற்றிப் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு**
**&**
**மதிப்பிற்குரிய டாக்டர் ஷேக் முஹம்மது மஹ்மூத் ஸாஹிப் மர்ஹூம் அவர்களை குறித்த நற்குறிப்பு**

உண்மை என்னவென்னறால், எந்த நாளன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவை விட்டு மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்றோர்களோ அல்லாஹ் அதே நாளன்றே அன்னாருக்கு, நீர் கவலை கொள்ள வேண்டாம்; ஒருநாள் உம்மை நான் இதே இடத்திற்கு மீண்டும் கொண்டு வருவேன் என்ற இந்த நற்செய்தியை வழங்கியிருந்தான்

அனைத்து இஸ்லாமியப் போர்களின் மீதும் பார்வையை செலுத்தினால் பின்னர் இந்த விஷயம் தெரிய வரும். அதாவது, அது தன்னகத்தே ஒரு நுட்பமான வடிவத்தை கொண்டிருக்கின்றது என்பது தெரிய வரும். குறிப்பாக மக்கா வெற்றிக்கு முன்னர் எந்த அளவிற்கு போர்கள் நிகழ்ந்தனவோ அவை அனைத்தின் நோக்கம் இதுவாக மட்டுமே இருந்தது. அதாவது மக்கா வெற்றிக்கான பாதையை சரி செய்ய வேண்டும்

அல்லாஹ் விரைவாக இனி இந்த பயங்கரவாதிகளை பிடிப்பதற்கான ஏற்பாட்டை செய்வானாக! மேலும் உண்மையான பயங்கரவாதிகளாகிய இந்த பெயர் தாங்கி மார்க்கவாதிகளிடமிருந்தும், மார்க்கத்தின் பெயரால் பயங்கரவாதத்தை நிகழ்த்தக் கூடியவர்களிடமிருந்தும் விடுதலை பெறுவது நாட்டை பாதுகாப்பதற்கு அவசியமாகும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 23 மே 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **23 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஒருவர் ஸலாம் கூறிய பிறகும் கூட அவரை ஒரு முஸ்லிம் கொலை செய்திருந்தார் என்ற குறிப்பை நான் கடந்த குத்பாவில் எடுத்துரைத்திருந்தேன். அது தொடர்பாக சூரா அந்நிஸாவின் 98-வது வசனத்தையும் ஓதியிருந்தேன். அதில் என்ன கூறப்பட்டுள்ளது? என்றால், உங்களுக்கு எவராவது ஸலாம் கூறினால், நீர் நம்பிக்கையாளர் இல்லை என்று அவரிடம் கூற வேண்டாம்.

அதன் கூடுதல் விவரம் அங்கு எடுத்துரைக்கப்படவிலல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நபரை தடுத்தார்கள் என்று மட்டும் அதனுடைய விபரமாக நான் கூறியிருந்தேன். ஆனால், அன்னார் (ஸல்) மிகுந்த கோபத்தை வெளிப்படுத்தினார்கள். மேலும், அந்த நபரை தன்னிடமிருந்து தொலைவில் விலக்கினார்கள். இன்னும் கூறுவதாயின் அன்னார் (ஸல்) அந்த நபருக்கு எதிராக துஆ செய்தார்கள். எவ்வாறு இருப்பினும், அன்னாருக்கு அது தொடர்பாக மிகுந்த வருத்தம் இருந்தது. அந்த நபர் பின்விட்டுச் சென்றவர்கள் தரப்பிலிருந்து ஹுனைன் போருக்குப் பின்னர் ஹஸ்ரத் நபிகள் (ஸல்) அவர்களிடம் அந்த கொலை செய்யப்பட்டவருக்கான பழிவாங்கும் விவகாரம் கொண்டு வரப்பட்டது. எனவே இதன் விபரம் அந்த சந்தர்ப்பத்தில் எடுத்துரைக்கப்படும். இன்ஷா அல்லாஹ்! எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை மிகுந்த வெறுக்கத் தக்க குற்றமாக கருதினார்கள். அந்தோ! அஹ்மதிகளின் மீது அநீதியிழைக்கக் கூடிய இன்றைய காலத்து பாகிஸ்தான் முல்லாக்கள், பெயர் தாங்கி மார்க்கத்தின் குத்தகைதாரர்கள் இதனை புரிந்திருக்க வேண்டுமே! அல்லாஹ்வின் பிடியில் இருந்து தப்பிப்பதற்கு அவர்கள் இவற்றிலிருந்து விலக வேண்டும்.

எவ்வாறு இருப்பினும், தற்போது இதே அடிப்படையில் படையெடுப்புகளைப் பற்றிய குறிப்புகள் எடுத்துரைக்கப்பட்டு வருகின்றன. எனவே ஹிஜ்ரீ 8-ம் ஆண்டு நிகழ்ந்த மக்கா வெற்றி குறித்து நான் எடுத்துரைப்பேன். இந்தப் படையெடுப்பானது மாபெரும் வெற்றி என்றும் அழைக்கப்படுகின்றது.இந்தப் போர் ஏற்கனவே கூறியது போன்று ஹிஜ்ரீ 8-ம் ஆண்டு, ரமலான் மாதம் நிகழ்ந்தது. இது எத்தகைய மகத்தான வெற்றி என்றால், இது தொடர்பாக அல்லாஹ் நற்செய்தி வழங்கியிருந்தான். இதன் விளைவாக மக்கள் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தில் நுழைந்தனர்.

மக்கா வெற்றியைக் குறித்த நற்செய்தி திருக்குர்ஆனில் கூறப்பட்டது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

وَ قُلْ رَّبِّ اَدْخِلْنِيْ مُدْخَلَ صِدْقٍ
وَّ اَخْرِجْنِيْ مُخْرَجَ صِدْقٍ
وَّ اجْعَلْ لِّيْ مِنْ لَّدُنْكَ سُلْطٰنًا نَّصِيْرًا

நீர் கூறுவீராக! என்னை இந்த நகரத்தில் அதாவது மக்காவில், ஹிஜ்ரத்திற்குப் பிறகு வெற்றியை வழங்கி நல்ல முறையில் நுழையச் செய்வாயாக! மேலும் இந்த நகரத்தில் இருந்து நல்ல முறையில் வெளியேறச் செய்வாயாக! (17:81). அதாவது ஹிஜ்ரத்.

மேலும் உன் புறமிருந்து வெற்றி மற்றும் உதவிக்கான ஏற்பாட்டை எனக்கு செய்வாயாக!

இந்த வசனமானது ஹிஜ்ரத்திற்கு முன்னரே சூரா பனீ இஸ்ராயீலில் அன்னாருக்கு இறங்கியது. அதில் ஹிஜ்ரத் பின்னர் மக்கா வெற்றி குறித்த செய்தி வழங்கப்பட்டிருந்தது. (தீப்பாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம் 346)

சூரா ஃபத்ஹில் மக்கா வெற்றி குறித்த நற்செய்தி இவ்வாறு வந்துள்ளது

لَقَدْ رَضِيَ اللّٰهُ عَنِ الْمُؤْمِنِيْنَ اِذْ يُبَايِعُوْنَكَ
تَحْتَ الشَّجَرَةِ فَعَلِمَ مَا فِيْ قُلُوْبِهِمْ
فَاَنْزَلَ السَّكِيْنَةَ عَلَيْهِمْ
وَ اَثَابَهُمْ فَتْحًا قَرِيْبًا

.பொருள்: நம்பிக்கையாளர்கள் மரத்திற்கடியில் உம்மிடம் உடன்படிக்கை செய்து கொண்டபோது, நிச்சயமாக அல்லாஹ் அவர்களை குறித்து மிகவும் மகிழ்ச்சியடைந்து, அவர்களின் உள்ளங்களிலிருந்த (நம்பிக்கை)தனை அறிந்து அண்மையில் வரவியிருக்கும் ஒரு வெற்றியைக் குறித்து அவர்களுக்கு வெகுமதியாக வழங்கினான். (48: 19)

உண்மை என்னவென்னறால், எந்த நாளன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவை விட்டு மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தார்களோ அல்லாஹ் அதே நாளன்றே அன்னாருக்கு, நீர் கவலை கொள்ள வேண்டாம்; ஒருநாள் உம்மை நான் இதே இடத்திற்கு மீண்டும் கொண்டு வருவேன் என்ற இந்த நற்செய்தியை வழங்கியிருந்தான்.

ஆக,ஹிஜ்ரத்தின்போது,

اِنَّ الَّذِيْ فَرَضَ عَلَيْكَ الْقُرْاٰنَ لَرَآدُّكَ اِلٰى مَعَادٍ

என்ற இந்த வசனம் இறங்கியது தொடர்பான குறிப்பும் கிடைக்கின்றது.

பொருள்: இந்தக் குர்ஆனின் போதனையினை உமக்குக் கடமையாக்கியவன் (உம்முடைய) திரும்புமிடத்திற்கு உம்மை நிச்சயமாக மீண்டும் கொண்டு வருவான். (அல்கஸஸ்: 86)

இமாம் ஃபக்ருத்தீன் ராஸீ இந்த வசனத்திற்கான விளக்கவுரையில் இவ்வாறு

எடுத்துரைக்கின்றார்கள்:

இந்த வசனத்தின் மஆத் என்ற திரும்பி வரும் இடம் என்பதன் பொருள் மக்கா ஆகும். இதன் காரணம் என்னவென்றால், இதன் பொருள், வெற்றி நாளன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவின் பக்கம் திரும்பி வருவார்கள் என்பதாகும்.

ஓர் அறிவிப்பில் உள்ளது; ஹிஜ்ரத் நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கா மற்றும் மதீனாவிற்கு இடையில் இருந்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவின் மீதான நேசத்தை வெளிப்படுத்தினார்கள். அப்போது, ஹஸ்ரத் ஜிப்ராயீல் (அலை) அவர்கள் இறங்கினார்கள். மேலும், கூறினார்கள்:

தாங்கள் (ஸல்), உங்களது நாட்டின் மீதும், பிறந்த ஊரின் மீதும் நேசம் கொண்டுள்ளீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு, ஆம்! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அப்போது ஜிப்ராயீல் (அலை) அவர்கள் கூறினார்கள்:

إِنَّ الَّذِي فَرَضَ عَلَيْكَ الْقُرْآنَ لَرَادُّكَ إِلَىٰ مَعَادٍ

என்று அல்லாஹ் கூறுகின்றான்.

பொருள்: இந்தக் குர்ஆனின் போதனையை உமக்குக் கடமையாக்கியவன் (உம்முடைய) திரும்புமிடத்திற்கு உம்மை நிச்சயமாக மீண்டும் கொண்டு வருவான்.

அதாவது அல்லாஹ் குறைஷியர்கள் மீது வெற்றி வழங்கி மக்காவின் பக்கம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை திரும்ப கொண்டு வருவான். ஏனெனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் இருந்தார்கள். பின்னர் அதனை துறந்துவிட்டார்கள். பின்னர் அங்கே திரும்பி வந்தார்கள். இந்த விஷயம் மக்காவைத் தவிர வேறு இடத்திற்கும் பொருந்த முடியாது.

ஆராய்ச்சியார்கள் பார்வையில் திருக்குர்ஆனின் இந்த முன்னறிவிப்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபித்துவத்திற்கான சான்றாகும். ஏனெனில், அன்னார் (ஸல்) இறைவன் புறமிருந்து (கிடைத்த) மறைவான விஷயத்தை கூறினார்கள். மேலும், அதேபோன்று சம்பவமும் நிகழ்ந்தது. அதாவது அன்னார் (ஸல்) கூறியிருந்தது போன்றே சம்பவம் நிகழ்ந்தது.

(அத்தஃப்ஸீருல் கபீர் ராஸீ, தொகுதி 13, பக்கம் 25, பக்கம் 19, தாருல் குதுபில் இல்மியா)

திருக்குர்ஆனில் மற்றோர் இடத்திலும் மக்கா வெற்றி கொள்ளப்படுவதற்கான முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உட்பட அனைத்து முஸ்லிம்களுக்கும் ஒருவகையில் நினைவூட்டல் வழங்கப்பட்டிருக்கின்றது. அதில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

பாருங்கள்! நீங்கள் எங்கு சென்றாலும், இறுதியில் மக்கா வெற்றி கொள்ளப்படும் ; மேலும் உங்களுக்கு அதற்காக முயற்சியும், உழைப்பும் மற்றும் துஆக்களும் செய்ய நேரிடும் என்பதை மறந்து விடாதீர்கள்!

மேலும் இந்த திருக்குர்ஆன் முன்னறிவிப்பின் ஒளியில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அதுவரையிலான அனைத்து போர்கள் மற்றும் இராணுவத் திட்டங்களின் ஒரே நோக்கம் மற்றும் இலக்கு மக்கா வெற்றியாகவே இருந்தது என்று நம்மால் கூற முடியும்.

ஆக, وَمِنْ حَيْثُ خَرَجْتَ فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ الْحَرَامِ என்ற மாபெரும் முன்னறிவிப்பை எடுத்துரைத்தவாறு- அதாவது இது சூரா பக்கராவின் வசனம் ஆகும் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அதன் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

وَمِنْ حَيْثُ خَرَجْتَ

என்பதற்கு விரிவுரையாளர்கள் இவ்வாறு பொருள் வழங்கியுள்ளனர். அதாவது, நீங்கள் எங்கு இருந்தாலும் எல்லா நிலையிலும் மஸ்ஜித் ஹராமை நோக்கி உங்களது கிப்லாவை ஆக்கிக் கொள்ள வேண்டும். அதற்கு, அவர்கள் இந்த காரணத்தை கூறுகின்றனர்: அதாவது, முந்தைய கட்டளையிலிருந்து, அநேகமாக இந்த கிப்லா மதீனாவாசிகளுக்கு மட்டுமே ஆகும்; மற்ற மக்களுக்கு கிடையாது என்ற எண்ணம் உருவாகியிருக்கக் கூடும்! எனவே நீங்கள் எங்கிருந்து புறப்பட்டாலும், உங்களது முகத்தை மஸ்ஜித் ஹராமை நோக்கி திருப்பிக் கொள்ளுங்கள் என்று வல்ல இறைவன் கூறினான்.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: ஆனால், உண்மை என்னவென்றால், இந்த வசனத்தில் முஹம்மது (ஸல்) அவர்களிடம் உரையாடப்பட்டிருந்தாலும் அனைத்து முஸ்லிம்களிடமும் உரையாடப்பட்டிருந்தாலும் சரியே இதன் பொருள், கிப்லாவின் பக்கம் முகம் திருப்புதல் என்பது பொருந்தவே முடியாது. ஏனெனில், முதல் விஷயமானது, ஒரு நகரம் அல்லது கிராமத்தில் இருந்து கொண்டு நிறைவேற்றப்படும் அந்த தொழுகைகள் நகரத்திலிருந்து வெளியேறும் நேரத்தின் தொழுகைகளை விட பொதுவாக அதிகமாக இருக்கின்றன. அதுபோன்ற நிலையில் எங்கு தொழுகைகள் அதிகமாக நிகழ முடியுமோ அங்கு அது தொடர்பாக கட்டளைகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறல்லாமல் எதன்படி அமல் செய்வது பயணத்தின் நிலையில் மிகக் குறைவானதாக இருக்கின்றதோ அந்த நேரத்திற்காக வழங்கப்பட்டிருக்கக் கூடாது.உதாரணமாக, ஒருநபர் நகரத்திலிருந்து பத்து மணிக்கு காலையில் புறப்படுகின்றார் அல்லது அஸர் மற்றும் மஃரிபிற்கு இடையில் புறப்படுகின்றார் அல்லது பாதி இரவில் புறப்படுகின்றார். மேலும் இந்த அனைத்து நேரங்களும் எப்படிப்பட்டவையாக இருக்கின்றன என்றால், அதில் தொழுகைக்கான கேள்வியே உருவாகாது.

இந்நிலையில்,

وَمِنْ حَيْثُ خَرَجْتَ فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ الْحَرَامِ

என்ற கட்டளையானது பொருளற்றதாக ஆகிவிடுகின்றது. ஏனெனில், ஒரு நகரத்திலிருந்து புறப்படும் நேரம் அரிதாகவே தொழுகைக்கான சந்தர்ப்பமாக இருக்கின்றது. பொதுவாக, ஒன்று மனிதன் அந்த நேரத்தில் தொழுகையை நிறைவேற்றி விடுகின்றான் அல்லது ஒருவேளை நிறைவேற்ற வேண்டியது இருந்தாலும் கூட சிறிது நேரத்திற்கு பிறகு கூட அவர் தொழுது கொள்ள முடியும்.

எவ்வாறு இருப்பினும், புறப்படுதல் என்பதற்கும் தொழுகைக்கும் தொடர்பு இல்லை. அடுத்து, ஏதேனும் ஒரு தொழுகைக்கு, புறப்படும் நேரத்துடன் குறிப்பான தொடர்பு இருந்திருந்தால் பின்னர் அந்நிலையில் இந்த அர்த்தங்களை சரியானதாக ஏற்றுக் கொண்டிருக்க முடியும்.. ஆனால், எந்தத் தொழுகையும் புறப்படும் நேரத்துடன் தொடர்புடையதாக இருப்பதில்லை. என்பதை அனைவரும் அறிவர். அதுபோன்ற நிலையில், இந்த வசனத்தை பயணத்திற்கான எண்ணத்துடன் வீட்டிலிருந்து புறப்படுவதுடன் தொடர்புபடுத்துவது எவ்வகையிலும் சரியானது கிடையாது. அதாவது.

وَمِنْ حَيْثُ خَرَجْتَ

என்பதற்கு தொழுகையில் கிப்லாவின் பக்கம் முகம் திருப்புவீராக! என்ற பொருள் இல்லை. என்பதற்கான கூடுதல் சான்று இதுவாகும். அதாவது பயணத்தின் நிலையிலோ சிலமுறை திசைக்கான கேள்வியே எழுவதில்லை. மேலும், எந்தப் பக்கம் முகம் இருக்குமோ அங்கு நோக்கியே தொழுகையை நிறைவேற்றிக் கொள்ள முடியும். உதாரணமாக, மனிதன் ஏதேனும் வாகனத்திலிருந்து இறங்க முடியவில்லை என்றால் பின்னர் எந்தப் பக்கம் முகம் இருக்குமோ அந்தப் பக்கமே தொழுது கொள்வது ஆகுமானதாகும் என்பது திருக்குர்ஆன் மற்றும் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் நடைமுறையில் இருந்து நிரூபணமாகின்றது. முகம் கிப்லாவை நோக்கி இருந்தாலும் சரி அல்லது வேறு எந்தப் பக்கம் இருந்தாலும் சரியே! அந்த நேரத்தில் திசையைப் பற்றிய எந்தக் கேள்வியும் எழுவதில்லை. (பயணத்தில்) கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என அனைத்து திசைகளும் ஒன்றாகவே இருக்கின்றன. உள்ளத்தின் கவனம் மட்டுமே கபஅத்துல்லாஹ்வின் பக்கம் இருப்பது அவசியமாகும். தொழுது கொண்டிருக்கும்போது எனது கவனம் கஅபத்துல்லாஹ்வின் பக்கம் உள்ளது என்ற எண்ணம் இருக்க வேண்டும். இன்றைய நாட்களில் மனிதன் இரயில் வண்டியில் அமர்கின்றபோது, அந்நேரத்திலும் எந்த திசையையும் குறிப்பிட முடியாது. ஏனெனில், வண்டி ஒரு சமயம் வடக்கு நோக்கி செல்லும் ; சில சமயம் தெற்கு நோக்கி செல்லும்; சில சமயம் கிழக்குப் பக்கமும், சில சமயம் மேற்குப் பக்கமும் திரும்பிக் கொண்டிருக்கின்றது. மேலும் வட்டம் அடித்துக் கொண்டிருக்கின்றது. இதே போன்று நீண்ட பயணங்களைக் கொண்ட கப்பல்களின் பயணங்களிலும் நாம் இதையே காண்கின்றோம். ஆனால், இதன் பிறகும் கூட எந்த நபர் அதில் அமர்ந்து கொண்டு தொழுது கொண்டிருக்கின்றாரோ அவரது தொழுகையில் எந்த தடங்கலும் ஏற்படுவதில்லை. திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் கொடுத்த அர்த்தங்களை சரியானது என்று புரிந்து கொண்டால் பின்னர் அந்தக் கட்டளையின் படி பயணி அமல் செய்யவும் முடியாது; அதேபோன்று இரயில் வண்டியில் அமர்ந்திருப்பவராலும் அமல் செய்ய முடியாது. எனவே புறப்பாடு என்பதில் திசை குறிப்பிட்டதாக இருக்க வேண்டும் என்பது சாத்தியமற்றதாக இருக்கும்போது, இந்த வசனத்திலிருந்து நீங்கள் எங்கிருந்து புறப்பட்டாலும் கஅபத்துல்லாஹ்வை நோக்கி முகம் திருப்பி தொழுங்கள் என்று பொருள் கொடுப்பது எவ்வாறு சரியாக இருக்க முடியும்?

நீங்கள் எங்கிருந்து புறப்பட்டாலும் உங்களது முகத்தை மஸ்ஜித் ஹராமை நோக்கி வைத்துக் கொள்ளுங்கள் அல்லது எங்கிருந்து நீங்கள் புறப்பட்டாலும் உங்களது முகத்தை மஸ்ஜித் ஹராமை நோக்கி வைத்துக் கொள்ளுங்கள் என்று இந்த வசனத்திற்கு பொருள்படுவதாலும் இந்தப் பொருள் சரியானது கிடையாது.

தற்பேது, சென்று கொண்டிருக்கும்போது தொழ முடியாது;

மாறாக ஓரிடத்தில் நின்று கொண்டுதான் தொழ முடியும் என்பதை எல்லா நபராலும் புரிந்து கொள்ள முடியும். எனினும்,

حَيْثُ مَا كُنْتَ فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ الْحَرَامِ

.என்ற சொற்கள் இந்த வசனத்தில் இடம்பெற்றிருந்தால் பின்னர் நீங்கள் எங்கிருந்து புறப்பட்டாலும் உங்களது முகத்தை மஸ்ஜித் ஹராமை நோக்கி வைத்துக் கொள்ளுங்கள் என்று பொருள் கொள்வது அப்போது சரியானதாக இருந்திருக்க முடியும்.

நீர் எங்கிருந்தாலும் உமது முகத்தை மஸ்ஜித் ஹராமை நோக்கி வைத்துக் கொள்வீராக! என்று இருந்தால் அப்போது இந்த அர்த்தம் சரியானதாக இருந்திருக்க முடியும். அதாவது, அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களே! அல்லது முஸ்லிம்களே! நீங்கள் எங்கிருந்து புறப்பட்டாலும் உங்களது முகத்தை மஸ்ஜித் ஹராமை நோக்கி வைத்துக் கொள்ளுங்கள். தொழுகை என்பது புறப்படும் நேரத்தில் தொழப்படுவதில்லை ; மாறாக, ஓரிடத்தில் இருந்து கொண்டு தொழப்படுகின்றது என்பது தற்போது மிகத் தெளிவான விஷயமாகும். எனவே இங்கு தொழுதல் என்று பொருள் கொள்வது எந்நிலையிலும் சரியானதல்ல என்பது தெரிய வருகிறது.

தொழுகைக்கும் மற்றும் புறப்பாட்டிற்கும் எந்த தொடர்பையும் ஏற்றுக் கொள்ளாவிட்டால் பின்னர் முரண் உறுதியாகி விடும் என்று திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறுகின்றனர். ஆனால், இது தவறாகும். அவர்களால் திருக்குர்ஆனின் சரியான பொருளையும், கருத்துகளின் பரஸ்பர தொடர்பையும் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதால் மட்டுமே அவர்களுக்கு திருக்குர்ஆனில் முரண்பாடு தென்படுகின்றது. அவர்களுக்கு எங்கேயாவது ஏதாவது ஆட்சேபனை தென்பட்டு விட்டால் பின்னர் உடனடியாக நாஸிக் மன்ஸூக் என்ற தர்க்கத்தை தொடங்கி விடுகின்றனர். ஒரு வசனத்தை நாஸிக் எனும் ரத்து செய்கின்ற வசனமாகவும், மற்றொன்றை மன்ஸூக் எனும் ரத்தான வசனமாகவும் ஆக்கிவிட்டு தப்பித்துக் கொள்கின்றனர். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் உலகிற்கு கூறியுள்ள உண்மைத்துவத்தை கருத்தில் கொண்டால் பின்னர் திருக்குர்ஆனில் எந்த மோதலும் தென்பட முடியாது; மேலும் அதேபோன்று எந்த வசனத்தையும் ரத்தாக்கப்பட்ட வசனமாக ஆக்க வேண்டிய அவசியமும் ஏற்படாது.

அசல் விஷயம் என்னவென்றால், இறைத் தூதர் (ஸல்) அவர்களை புனித மக்காவிலிருந்து வெளியேற்றப்பட்டபோது, அந்நேரத்தில் இஸ்லாத்தின் எதிரிகளுக்கு இவ்வாறு ஆட்சேபனை செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. அதாவது, இப்ராஹீம் (அலை) அவர்களின் துஆவினால் வாக்களிக்கப்பட்டவராக அன்னார் (ஸல்) இருந்தார்கள்; மேலும், கஅபதுல்லாஹ்வுடன் அன்னாருக்கு தொடர்பு இருந்தது என்றால், பின்னர் எழும் கேள்வி இதுவாகும். அதாவது, அன்னார் (ஸல்) ஏன் மக்காவிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள்? அன்னார் (ஸல்) மக்காவிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கும்போது பின்னர் அன்னார் (ஸல்) எப்படி இப்ராஹீம் (அலை) அவர்களின் துஆவை உண்மைப்படுத்தக் கூடியவராக இருக்க முடியும்?

இந்த ஆட்சேபனைக்கான பதிலாக அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

وَمِنْ حَيْثُ خَرَجْتَ فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ الْحَرَامِ

முஹம்மத் (ஸல்) அவர்களே! நீர் மக்காவிலிருந்து இவ்வாறு புறப்படுவது தற்காலிகமானதாகும். உமக்கு நாம் மீண்டும் இந்த சந்தர்ப்பத்தை வழங்குவோம். மேலும் நீர் மக்காவை கைப்பற்றி விடுவீர் என்று நாம் உம்மிடம் இந்த வாக்குறுதியை செய்கின்றோம்.

ஆனால், அல்லாஹ் எங்கு நம்பிக்கையாளர்களுக்கு இந்த வாக்குறுதியை வழங்கியுள்ளானோ அங்கு அவர்களிடம் இந்த எதிர்பார்ப்பையும் வைத்திருக்கின்றான்: அதாவது, அவர்கள் இந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றான். அதுவன்றி இறைவன் அவர்களுடன் வாக்குறுதி செய்துவிட்டான்; எனவே அவர்கள் கைகட்டி அமர்ந்து கொள்ள வேண்டும்; மேலும் அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்யக் கூடாது என்பதல்ல. மேலும், அல்லாஹ் வாக்குறுதி செய்திருக்கின்றான்; எனவே அவன் அதனை முழுமை செய்துவிடுவான்; நாம் அதனை நிறைவேற்றுவதற்கு என்ன அவசியம் இருக்கின்றது? என்று புரிந்து கொள்ளக் கூடாது.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் சமுதாயத்துடன் அவர்களுக்கு கின்ஆன் நாடு வழங்கப்படும் என்று அல்லாஹ் வாக்குறுதி செய்திருந்தான். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் தமது சமுதாயத்தை அழைத்துக் கொண்டு சென்றார்கள். அந்த தேசம் முன்னால் வந்தபோது, அன்னார் (அலை) தமது சமுதாயத்திடம், செல்லுங்கள்; மேலும் சண்டையிட்டு இந்த நாட்டை கைப்பற்றுங்கள் என்று கூறினார்கள். அப்போது, இறைவன் இந்த நாட்டை வழங்குவதாக வாக்குறுதி செய்திருக்கின்றான்; எனவே அவன் சுயமே அந்த வாக்குறுதியை நிறைவேற்றி விடுவான் ; மேலும் இந்த நாட்டை நமது கட்டுப்பாட்டில் தந்து விடுவான் ; நாம் இந்த நாட்டை வெற்றி கொண்டுவிட்டால் பின்னர் அந்த வாக்குறுதியின் பயன் என்ன இருக்கும்? வாக்குறுதியோ இறைவன் செய்திருக்கின்றான். எனவே அவன் அதனை நிறைவேற்றுவான்; நாம் அதற்காக எவ்வகையான முயற்சியும் செய்வதற்கு அவசியம் கிடையாது என்று ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் சமுதாயம் தவறாக புரிந்து கொண்டது. எனவே அவர்கள்,

.. اِذْهَبْ اَنْتَ وَرَبُّكَ فَقَاتِلَاۤ اِنَّا هٰهُنَا قٰعِدُوْنَ

என்று ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களிடம் கூறினார்கள். பொருள்: மூஸாவே! இந்த தேசத்தை இறைவன் உங்களுக்கு வழங்குவான் என்று நீர் எங்களிடம் கூறி வந்தீர்! தற்போது அனைத்து பொறுப்பும் உம் மீது இருக்கின்றது அல்லது உமது இறைவன் மீது ; நாங்கள் நாட்டை வெற்றி கொண்டால் பின்னர் உம்முடைய மற்றும் உமது இறைவனுடைய வாக்குறுதியின் பயன்தான் என்ன? இந்த தேசம் நமக்கு நிச்சயமாக கிடைக்கும் என்பது இறைவனின் வாக்குறுதியாகும் என்று நீர் எங்களிடம் கூறிவந்தீர்! எனவே நீரும், உமது இறைவனும் சென்று போரிடுங்கள்; நாங்கள் இங்கேயே அமர்ந்திருப்போம் என்று அவர்கள் கூறினர். நாட்டை வெற்றி கொண்டு எங்களிடம் நீர் வழங்கிவிடும் போது பின்னர் நாங்கள் அதில் நுழைவோம்.

தற்போது வெளிப்படையில் அவர்கள் கூறுவது சரியானதாக தெரிகின்றது. ஒரு நபர் ஒருவரிடம், நான் உனக்கு இன்ன இன்ன பொருள்களை தருவேன் என்று கூறினால், மேலும் அந்த நபர் வந்து அவரிடம் அந்த பொருள்களை கேட்டால், (வாக்குறுதி கொடுத்த) அந்த நபர் செல்லுங்கள்; கடைவீதியில் சென்று வாங்கிக் கொள்ளுங்கள் என்று அந்த நபரிடம் கூறினால், பின்னர் எல்லா மக்களும் இவ்வாறே கூறுவர்; அதாவது அவர் கடை வீதியில் சென்று தான் அனைத்தையும் வாங்க வேண்டும் என்றால் பின்னர் அவரிடம் வாக்குறுதி செய்ததற்கு என்ன அவசியம் இருந்தது? எனவே வெளிப்படையில் இந்த விஷயம் அறிவுப்பூர்வமானதாக தெரிகின்றது. ஆனால், இறை அமைப்புகளில் இது முதல் நிலை அறிவீனமான கூற்றாகும்.

ஆக, வல்ல இறைவன் பனீ இஸ்ராயீலை புகழ்ந்து கூறவில்லை. நீங்கள் போரிடுவதற்கு அவசியம் இல்லை ; நாம் இந்த நாட்டை எடுத்து உங்களுக்கு கொடுப்பது எமது பொறுப்பாகும் என்று இறைவன் அவர்களிடம் கூறவில்லை. மாறாக, அவன் கூறினான்: நீங்கள் எம்மை ஏளனப்படுத்தியுள்ளீர்கள். எனவே நீங்கள் இந்த நாட்டிலிருந்து இழப்பிற்குரியவர்களாக ஆக்கப்படுகின்றீர்கள். செல்லுங்கள்; நாற்பது வருடங்கள் வரை காடுகளில் சுற்றித் திரியுங்கள்; உங்களால் இந்த தேசத்திற்கு வாரிசாக ஆக முடியாது. உங்களது சந்ததிகள் இந்த தேசத்திற்கு வாரிசுகளாவார்கள். ஏனெனில், நீங்கள் எம்மை ஏளனப்படுத்தியுள்ளீர்கள்.

எனவே பாருங்கள்! இந்த விஷயம் மனிதனைப் பொருத்த வரை சரியானது என்றும்,அறிவுப்பூர்வமானது என்றும் கூற முடியும். ஆனால் இறை இயக்கங்களின் அடிப்படையில் மிகவும் அறிவற்ற விஷயமாகும். மேலும், மனிதனை தண்டனைக்கு தகுதி வாய்ந்ததாக ஆக்கிவிடுகின்றது. அதன் காரணம் இதுவாகும். அதாவது, ஒரு மனிதன் வாக்குறுதி செய்கின்றபோது, அவனுக்கு வானத்தின் மாற்றங்கள் மற்றும் பூமியின் மாற்றங்கள் மீது அதிகாரம் இருப்பதில்லை. அதாவது, வானிலும், மண்ணிலும் ஏற்படும் மாற்றங்களை அவனால் கட்டுப்படுத்தும் அதிகாரம் இருப்பதில்லை. எனவே அவன் வாக்குறுதி செய்கின்றபோது அவனது கட்டுப்பாட்டில் இருக்கின்ற விஷயத்தை அவர் செய்கின்றார். ஆனால், இறைவன் புறமிருந்து செய்யப்படும் வாக்குறுதி என்பதன் பொருள் இவ்வாறாக அமையும். அதாவது, அந்த விஷயத்தை அடைவது உமக்கு சாத்தியமற்றதாகும். ஆனால், இது உங்களுக்கு எமது உதவியால் கிடைக்கும்.

ஃபிஅவ்னிடம் நூற்றுக்கணக்கான வருடங்கள் அடிமையாக இருந்த அந்த சமுதாயம், அவனுக்காக செங்கற்களை உருவாக்கி கொடுத்து வந்தது; மரக்கட்டைகளை வெட்டி கொடுத்து வந்தது; மேலும் இழிவிலும் இழிவான பணிகளை செய்து வந்தது. ஆது சமுதாயம் ஆட்சியாளர்களாக இருந்த அவ்வளவு பெரிய மகத்தான நாட்டை எவ்வாறு அந்த சமுதாயத்தால் கைப்பற்றியிருக்க முடியும்? அந்த சமுதாயத்திற்கு இந்த தேசம் கிடைத்து விடுவது என்பது எளிய காரியமாக இருக்கவில்லை. ஆனால், இறைவன் கூறினான்: உங்களுக்கு இந்த நாட்டை பெறுவது சாத்தியமற்றதாக உங்களுக்கு தென்படலாம். ஆனால், இந்த தேசத்தை நாம் உங்களுக்கு வழங்குவோம்; மேலும், நீங்கள் இந்த நாட்டை எமது உதவியால் பெற்றுக்

கொள்வீர்கள் என்று நாம் இந்த வாக்குறுதியை செய்கின்றோம்.

ஆக, அவன் வாக்குறுதி செய்துள்ளான்; எனவே அடியார்களுக்கு முயற்சி செய்வதற்கு அவசியம் இல்லை என்பது இறைவனின் வாக்குறுதிக்கு அர்த்தம் கிடையாது. மாறாக, அதன் பொருள் என்னவென்றால், நீங்கள் அந்த விஷயத்தை பெறுவதற்காக திட்டம் வகுக்கும்போது பின்னர் அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்வான். மேலும் நீங்கள் வெற்றி பெற்றுவிடுவீர்கள். ஆக, அல்லாஹ்வின் வாக்குறுதி என்பது வேறு வகையானதாக இருக்கின்றது. மேலும் அடியாரின் வாக்குறுதி என்பது வேறு வகையானதாக இருக்கின்றது. திட்டங்களை உள்ளடக்கிய இறைவனின் வாக்குறுதிகளில் அடியார்களுக்கும் பங்கு பெற நேரிடுகின்றது. மேலும், அதனை நிறைவேற்றுவதற்காக முயற்சி செய்ய நேரிடுகின்றது. ஒருவேளை அடியார் அதில் பங்கு பெறவில்லையென்றால் மேலும், அதனை முழுமை செய்வதற்கு முயற்சி செய்ய மாட்டார் என்றால் பின்னர் அவர் (இறைத்) தண்டனைக்கு உரியவராக இருப்பார். ஆனால், மனிதனின் வாக்குறுதியில் இது இருப்பதில்லை. அதாவது நான் உங்களுக்காக இறை நியதியை மாற்றி விடுவேன் என்று மனிதனால் கூற முடியாது. ஏனெனில், அது அவனது அதிகாரத்திற்கு உட்பட்டது கிடையாது. அவன் அவ்வாறு கூறுவான் என்றால், பின்னர் அல்லாஹ் கூறுகின்றான். இறை நியதியை மாற்றுவதற்கு நீர் யார்? என்று அவரிடம் நாம் கேட்போம். ஆனால், நீர் அவ்வாறு செய்தால், அதாவது எனது கட்டளைக்கு ஏற்ப திட்டம் வகுத்தால் பின்னர் நான் உங்களுக்கு உதவி செய்வேன். மேலும், எனது நியதியை நான் மாற்றி விடுவேன் என்று இறைவன் கூற முடியும்.

ஏனெனில், இறை நியதி எப்படிப்பட்ட விஷயம் என்றால், அது அவனது கட்டுப்பாட்டில் இருக்கின்றது. மேலும், அவன் எப்போது நாடுவானோ அப்போது அவனால் அதனை மாற்ற முடியும். இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு மக்கா வெற்றிக்கான வாக்குறுதி வழங்கப்பட்டபோது, அத்துடன் முஸ்லிம்களிடம் இவ்வாறு கூறப்பட்டது. அதாவது முஸ்லிம்களே! நீங்கள் மூஸாவின் சமுதாயத்தைப் போன்று இறைவன் மக்காவை வழங்குவதாக வாக்குறுதி அளித்துள்ளான் ; அவன் சுயமே அதனை நிறைவேற்றுவான் ; நமக்கு அதற்காக திட்டங்களை வகுப்பதற்கு அவசியம் இல்லை என்று புரிந்து கொள்ளக் கூடாது. மாறாக, அது நிறைவேறுவதற்காக உங்களுக்கும் முயற்சி மேற்கொள்ள நேரிடும்.

இறை வாக்குறுதியின் பொருள் என்னவென்றால், நீங்கள் பலவீனர்கள் ஆவீர்கள் என்பதாகும். நீங்கள் பலவீனர்கள் இல்லையென்றால் நீங்கள் மக்காவை விட்டு விட்டு ஏன் செல்ல வேண்டும்? மக்காவை விட்டு செல்வதன் பொருளே இதுவாக இருந்தது. அதாவது, நீங்கள் பலவீனர்கள் ஆவீர்கள்; மேலும் உங்களது எதிரி வலிமை வாய்ந்தவன் ஆவான். மேலும் அதிகாரம் படைத்தவன் ஆவான். ஆனால், வல்ல இறைவன் உங்களுக்கு ஆற்றல் வழங்குவான். மேலும் நீங்கள் எதிரிகளிடமிருந்து மக்காவை பறித்துக் கொள்வீர்கள். எனவே

وَمِنْ حَيْثُ خَرَجْتَ فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ الْحَرَامِ

என்பதன் பொருள் இதுவாகும். அதாவது நீங்கள் எங்கிருந்து புறப்பட்டாலும் அல்லது எந்த இடத்திலிருந்து நீங்கள் புறப்பட்டாலும் உங்களது நோக்கம் இவ்வாறாக இருக்க வேண்டும். அதாவது, நாம் மக்காவை வெற்றி கொள்ள வேண்டும். அடுத்து புறப்பாடு என்பதன் பொருள் படையெடுப்பு என்பதும் ஆகும். அந்நிலையில் இந்த வசனத்தின் பொருள் இவ்வாறாக இருக்கும். அதாவது, நீங்கள் எங்கிருந்து படையெடுத்தாலும் எந்த இடத்திற்கு போருக்காக சென்றாலும் என்பது பொருளாகும். நீங்கள் கிழக்கு நோக்கி புறப்பட்டாலும் அல்லது தெற்கு நோக்கி புறப்பட்டாலும் மேற்கு நோக்கி புறப்பட்டாலும், வடக்கு நோக்கி புறப்பட்டாலும் சரியே! உங்களது நோக்கம் இதுவாக இருக்க வேண்டும். அதாவது, உங்களது இந்த புறப்பாடு என்பது மக்கா வெற்றிக்கான அடித்தளத்தை அமைக்கக் கூடியதாகும் என்ற நோக்கம் இருக்க வேண்டும். உதாரணமாக, நீங்கள் தெற்கு நோக்கி எதிரிகளின் மீது தாக்குதல் நடத்த விரும்பினால், ஆனால், அதே நேரம் அந்த நாட்டின் மேற்கு திசையின் பக்கம் அவனது நண்பர்கள் இருக்கின்றனர் என்று உங்களுக்கு தெரிய வந்தால், மேலும் அவர்கள் ஒருவேளை பின்னால் இருந்து தாக்குதல் தொடுத்துவிடுவார்களோ என்ற ஐயம் உங்களுக்கு இருந்தால் பின்னர் நீங்கள் முதலில் மேற்கு பக்கம் தாக்குதல் நடத்தி அவர்களை அழித்து விடுங்கள். இதன் பொருள் இவ்வாறாக இருக்கும். அதாவது, மேற்குப் பக்கம் செய்யப்படும் தாக்குதல் என்பது தெற்கு பக்கம் நடத்தவிருக்கும் தாக்குதலின் முன்னோட்டம் ஆகும். இதே போன்று, அந்த சமுதாயத்தின் கூட்டாளிகள் வடக்கில் வசிக்கின்றனர் என்றால், முதலில் நீங்கள் அவர்கள் மீது தாக்குதல் நடத்துங்கள். அந்நிலையில் உங்களது இந்த தாக்குதல் என்பது உண்மையில் தெற்கு பக்கம் செய்யப்படும் தாக்குதலாகவே இருக்கும். ஏனெனில், உங்களுடைய அசல் நோக்கம் என்பது தெற்கில் உள்ள எதிரியின் மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்பதாகும். இதன் பக்கம் சைகை செய்தவாறே அல்லாஹ் கூறுகின்றான்:

முஸ்லிம்களே! நீங்கள் எந்த சமுதாயத்தின் மீதும், நாட்டின் மீதும், பகுதியின் மீதும் போர் தொடுக்கும்போதும் உங்களது முகம் மக்காவை நோக்கியே இருக்க வேண்டும். ஏனெனில், அல்லாஹ் உங்களது கரங்களில் அதனை வெற்றி கொள்ளச் செய்ய விரும்புகின்றான். ஆக, நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போர்களில் பார்வையை செலுத்தும்போது, அவற்றில் இந்த வடிவம் தெளிவாக காணப்படுவதை நாம் அறிகின்றோம். மேலும், அன்னாருடைய எல்லா போர்களின் உயர் நோக்கமும் மக்கா வெற்றியாகவே இருந்தது. எந்தப் போரில் இந்த நோக்கம் செயலிழந்ததாக பார்ப்பார்களோ அல்லது எந்த சமுதாயத்தைக் குறித்து அதனுடன் போரிடுவதால் மக்கா வெற்றி தாமதமடையும் என்று அன்னார் (ஸல்) உணர்வார்களோ அங்கு தூண்டப்பட்டப் பிறகும் கூட அன்னார் (ஸல்) அமைதியாக இருப்பார்கள்; மேலும் கண்டும் காணாமல் விட்டுவிடுவார்கள்.

ஆக, பல சமுதாயங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் போரிடுவதற்கு முன்வந்தன. மேலும் அவர்கள் சீண்டவும் செய்தனர். ஆனால், அன்னார் (ஸல்) எப்போதும் பொறுமையை கை கொண்டார்கள். ஆனால், எந்த சமுதாயத்தை தோல்வியுறச் செய்வதனால் மக்கா வெற்றி சமீபமாகிவிடுமோ அந்த சமுதாயத்துடன் அன்னார் (ஸல்) கண்டிப்பாக போர் செய்தார்கள்.

அனைத்து இஸ்லாமியப் போர்களின் மீதும் பார்வையை செலுத்தினால் பின்னர் இந்த விஷயம் தெரிய வரும். அதாவது, அது தன்னகத்தே ஒரு நுட்பமான வடிவத்தை கொண்டிருக்கின்றது என்பது தெரிய வரும். குறிப்பாக மக்கா வெற்றிக்கு முன்னர் எந்த அளவிற்கு போர்கள் நிகழ்ந்தனவோ அவை அனைத்தின் நோக்கம் இதுவாக மட்டுமே இருந்தது. அதாவது மக்கா வெற்றிக்கான பாதையை சரி செய்ய வேண்டும்.

ஏற்கனவே கூறப்பட்டது போன்று நீங்கள் எங்கிருந்து புறப்பட்டாலும் கிப்லாவின் பக்கம் முகம் திருப்புங்கள் என்பது இந்த வசனத்தின் பொருளாக இருந்திருந்தால் பின்னர் مِنْ حَيْثُ خَرَجْتَ என்ற சொற்கள் வசனத்தில் இருந்திருக்காது. இன்னும் கூறப்போனால், இந்த சொற்களுக்குப் பகரமாக நீங்கள் எங்கே இருந்தாலும் கிப்லாவின் பக்கம் உங்களது முகத்தை வைத்துக் கொள்ளுங்கள் என்ற இந்த சொற்கள் இருந்திருக்கும். கிப்லாவின் பக்கம் முகத்தை வைப்பதற்காக எங்கேயிருந்தாலும் என்ற சொற்கள் இருந்திருக்க வேண்டுமே தவிர, நீங்கள் எங்கிருந்து புறப்பட்டாலும் கிப்லாவின் பக்கம் முகத்தை வைத்துக் கொள்ளுங்கள் என்ற சொற்கள் இருந்திருக்காது. ஏனெனில், மக்கள் புறப்படும் நேரத்தில் தொழுவதில்லை. புறப்படும் நேரத்திலோ மக்கள் சென்றுவிடவே செய்கின்றனர். எனவே இந்த வசனத்திற்கு தொழுகைகளை நிறைவேற்றுவதுடன் எந்த தொடர்பும் கிடையாது. மாறாக, இந்த வசனத்தின் பொருள் இது மட்டுமே ஆகும். அதாவது, நீங்கள் எங்கிருந்து புறப்பட்டாலும் நீங்கள் எதன் திசை கிழக்குப் பக்கம் இருக்குமோ அந்த இடத்தில் இருந்து புறப்பட்டாலும் சரி! மேற்குப் பக்கம் இருக்கும் இடத்திலிருந்து புறப்பட்டாலும் சரி; வடக்குப் பக்கம் இருக்கும் இடத்திலிருந்து புறப்பட்டாலும் சரி தெற்குப் பக்கம் இருக்கும் இடத்திலிருந்து புறப்பட்டாலும் சரி!

எவ்வாறு இருப்பினும், உமது நிலை மக்காவை நோக்கி இருக்க வேண்டும். அதாவது உமது கவனமும், உமது எண்ணமும் உமது சிந்தனையும் இந்த விஷயத்தின் பக்கமே இருக்க வேண்டும். அதாவது நீங்கள் மக்காவை வெற்றி கொள்ள வேண்டும்; மேலும் அங்கு இஸ்லாத்தை நிறுவி முழு அரபையும் தாக்கத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் என்பதாகவே இருக்க வேண்டும். வுஜூஹ் என்பதற்கு நோக்கங்கள் என்றும் பொருள்படும். எனவே இதன் பொருள் இவ்வாறாகும். அதாவது, நீங்கள் கஅபத்துல்லாஹ்வை வெற்றி கொண்டு அதனை இஸ்லாத்தின் தலைமையகமாக ஆக்க வேண்டும் என்பதே உங்களது ஒரே நோக்கமாக இருக்க வேண்டும். ஏனெனில், மக்காவில் இஸ்லாம் பரவி விடாத வரை, மக்கா முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்து விடாத வரை ஏனைய அனைத்து அரபு சமுதாயமும் முஸ்லிமாக ஆக முடியாது. முஸ்லிம்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சிநிரல் இதுவாகவே இருந்தது. மேலும், இந்த நிகழ்ச்சிநிரல் அவர்களின் ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. நிச்சயமாக அரேபியாவின் எந்தவொரு ஆட்சியும் ஓர் முறையான அரசமைப்பை கொண்டதாக இல்லை. மேலும் ஒரே அரசரின் கீழும்

இருக்கவில்லை. பல்வேறு அரசர்கள் அதனுடன் தொடர்பு வைத்திருந்தனர். மேலும் உடன்படிக்கைகள் போன்றவற்றை செய்திருந்தனர். இதே போன்று மக்கா முழுமையாக முறையான ஆளுமைக்குட்பட்டதாக இருக்கவில்லை என்றாலும் கூட அது எப்படிப்பட்ட ஒரு நாட்டின் தலைநகரமாக இருந்தது என்றால், அதன் மக்கள் தொகை சுமார் 15 ஆயிரம், 20 ஆயிரத்தை கொண்டதாக இருந்தது. சுற்று வட்டாரத்தின் அனைத்து கோத்திரங்களின் பார்வையும் அதன் மீது இருந்தது. மேலும், அவர்கள் அதன் தீர்ப்புகள் மற்றும் கட்டளைகளுக்கு தங்களை கட்டுப்பட்டவர்களாக கருதி வந்தனர். பின்னர் அந்த காலத்தின் அடிப்படையில் அது ஒரு மாபெரும் நகரமாக இருந்தது. 15,16 ஆயிரம் எண்ணிக்கையில் மக்கள் தொகையை கொண்டிருந்தது. அதனுடைய ஒட்டுமொத்த மக்கள் மட்டுமல்லாமல் நாடு முழுவதும் 15,20 ஆயிரம் குடிமக்கள் அனைவருமே போர் வீரர்களாக இருந்தனர். போர் கலைகளில் மிகவும் நிபுணத்துவம் பெற்றிருந்தனர். வீரம் மிக்கவர்களாகவும், போர் வீரர்களாகவும் இருந்தனர். முஸ்லிம்களுக்கு அவர்களுடன் போர் புரிவது என்பது ஒன்றும் எளிதான பணியாக இருக்கவில்லை.

இந்த வசனம் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு இறங்கிய அந்த காலத்தில் முஸ்லிம்களிடம் வெறும் நானூறு, ஐநூறு போர் வீரர்களே இருந்தனர். அதிகபட்சமாக ஆயிரம் நபர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். மேலும், பெண்கள் மற்றும் குழந்தைகளை சேர்த்து அவர்களின் மொத்த எண்ணிக்கை சுமார் ஆயிரத்தி நூறு, ஆயிரத்தி இருநூறு இருந்திருக்கும். இதை விட கூடுதலாக முஸ்லிம்களின் எண்ணிக்கை இருக்கவில்லை. மேலும் அவர்களின் போர் ஆற்றலோ குறிப்பிடத்தகுந்ததும் கிடையாது. ஆனால், அது போன்ற நிலையில் அதாவது முஸ்லிம்கள் பலவீனர்களாக இருந்த நிலையில், அவர்களின் எண்ணிக்கை காஃபிர்களுக்கு எதிரில் எந்த வகையிலும் பொருத்தமற்றதாக இருந்து வந்தது. அவர்களிடம் போருக்கான எந்த தளவாடங்களும் இருந்திருக்கவில்லை. அவர்களின் போர் வலிமை எதிரியுடன் ஒப்பிடுகையில் எந்த வகையிலும் பொருளுடையதாக இருந்திருக்கவில்லை. இந்நிலையில், அல்லாஹ் எல்லா காஃபிர்களுக்கும் சவால் விடுத்தான்.அதாவது கூறினான். இந்த முஸ்லிம்கள் உங்களுக்கு குறைவானவர்களாக தென்படுகின்றார்கள். உங்களுக்கு பலவீனர்களாகவும், வலிமையற்றவர்களாகவும் தென்படுகின்றார்கள். ஆனால், இதே முஸ்லிம்கள் ஒருநாள் உங்களது நாட்டை வெற்றி கொண்டுவிடுவார்கள். உங்களது தலைநகரத்தை கைப்பற்றி விடுவார்கள். மேலும் அங்கு அவர்களுக்கு எந்த அளவுக்கு வெற்றி கிடைத்து விடும் என்றால், இவர்கள் இஸ்லாத்தின் கட்டளைகளை அங்கு அமல்படுத்துவார்கள்; மேலும் நிராகரிப்பை அரேபிய மண்ணிலிருந்து முற்றிலும் அழித்து விடுவார்கள். இந்த வாதம் முஸ்லிம்களின் நிலையின் அடிப்படையில் ஒரு பைத்தியக்காரத்தனமான வாதமாக இருந்தது. அடுத்து, இந்த வாதம் எத்தகையதாக இருந்தது என்றால், அது ஒரு குறிப்பிட்ட ஒரு பகுதியை மட்டும் சார்ந்ததாக இருக்கவில்லை. மாறாக, இந்த வாதத்தின் தாக்கம் மிகவும் பரந்து விரிந்ததாக இருந்தது. ஏனெனில், இதில் மக்கா வெற்றியைக் குறித்து மட்டும் முன்னறிவிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. அரேபியாவை மட்டும் வெற்றி கொள்வதற்கான அறிவிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. மாறாக, கிறிஸ்தவத்திற்கும் சவால் விடுக்கப்பட்டிருந்தது. யூதத்துவத்திற்கும் சவால் விடுக்கப்பட்டிருந்தது. மஜூஸிய்யத்திற்கும் சவால் விடுக்கப்பட்டிருந்தது. மேலும், இந்த அனைத்து மார்க்கங்களையும் தோற்கடித்து இஸ்லாம் முழு உலகில் வெற்றி பெற்று விடும் என்று பெரும் அழுத்தத்துடன் இந்த அறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. இந்த வாதம் ஒரு பைத்தியக்காரத்தனமான வாதமாக (உலகியல் வாதிகளுக்கு) இருந்தது. இதன் காரணமாகவே நிராகரிப்பாளர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நவூதுபில்லாஹ்! பைத்தியக்காரர் என்று கூறி வந்தனர். மேலும், ஸஹாபிகளையும் பைத்தியக்காரர்கள் என்று கருதி வந்தனர். ஏனெனில், அவர்கள் எப்படிப்பட்ட ஒரு வாதத்தை செய்து கொண்டிருந்தனர் என்றால், அது நிறைவடைவதற்கு இந்த பௌதீக உலகில் எந்த காரணியும் தென்பட்டிருக்கவில்லை. ஆனால், உண்மை இதுவாகும். அதாவது, அசாதாரண பணிகளுக்காக ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் அந்த நிலை உருவாகி விடாத வரை சில நிலைமைகளில் மருத்துவத்தில் மான்ஸோமீனியா (ஆங்கிலம்) என்று கூறப்படுகின்றது. அதாவது ஒரு விஷயத்தின் மீது மட்டுமே கவனம் கொள்வது கூறப்படுகின்றது. மற்ற எல்லா நோக்கங்களையும் அவர் மறந்து விடாத வரை, அவரிடத்தில் எப்போதும் ஒரு உத்வேகமும், நிம்மதியின்மையும் நிலவாத வரை, அசாதாரண பணிகளுக்காக அவரிடத்தில் பைத்தியத்தைப் போன்ற தன்மை உருவாகாத வரை அது சாத்தியமாகாது. அதுவரை அந்த பணிகளில் ஒருபோதும் வெற்றி கிடைக்க முடியாது. இதன் பக்கமே திருக்குர்ஆன் இந்த வசனத்தில் கவனமூட்டியுள்ளது. அதாவது, நீங்கள் மற்ற எல்லா நோக்கங்களையும் மறந்து விடுங்கள்; மேலும், நாம் மக்காவை இஸ்லாத்திற்காக வெற்றி கொள்ள வேண்டும் என்ற இந்த நோக்கத்தை மட்டும் உங்கள் கருத்தில் கொள்ளுங்கள். இந்த தலைமையகமும், கோட்டையும் உங்களுக்கு கிடைக்காத வரை முழு அரேபியாவையும் பின்னர் முழு உலகையும் உங்களால் வெற்றி கொள்ள முடியாது. இங்கு இந்த கேள்வி எழுகின்றது. அதாவது நீங்கள் எந்த இடத்திலிருந்து புறப்பட்டாலும் உங்களது கவனத்தை மஸ்ஜித் ஹராமின் பக்கம் வையுங்கள் என்று அல்லாஹ் ஏன் கூறினான்?

நீங்கள் எந்தப் பக்கத்திலிருந்து தாக்குதல் தொடுத்தாலும் உங்களது கவனத்தை மஸ்ஜித் பக்கம் வையுங்கள் என்று ஏன் கூறவில்லை? இதற்கான பதில் இதுவாகும். அதாவது, இந்த தாக்குதலால் நமது நோக்கம் என்ன? என்பது புறப்பாடு சமயத்திலேயே தீர்மானிக்கப்படுகின்றதே அல்லாமல், மனிதன் முன்னரே போரை தொடங்கி விட்டு அதன் நோக்கத்தை பின்னர் சிந்திப்பது என்பது கிடையாது. எனவே இங்கு மக்கா வெற்றியை கருத்தில் கொள்வதன் பக்கம் கவனமூட்டுவது நோக்கமாக இருந்தது. எனவேதான், நமது போரின் தாக்கம் மக்கா வெற்றியின் மீது என்ன தாக்கத்தை ஏற்படுத்தும்? என்பதை நீங்கள் புறப்படும் நேரத்தில் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறப்பட்டுள்ளது. அந்தப் போர் ஒருவேளை மக்கா வெற்றிக்கு உதவாது என்றால் அதனை தவிர்த்து விடுங்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆயினும், இதிலிருந்து இஸ்லாம் தனது சீடர்களை கண்மூடித்தனமான போருக்கு அனுமதி வழங்குகின்றது என்று புரிந்து கொள்ளக் கூடாது. ஏனெனில், வரலாற்றில் இருந்து இந்த விஷயம் நிரூபணம் ஆகியுள்ளது. அதாவது, இந்த வசனங்கள் இறங்குவதற்கு முன்னரே நிராகரிப்பாளர்களுடன் போர் துவங்கிவிட்டிருந்தது.மேலும், இந்த விஷயத்தையும் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது,

وَمِنْ حَيْثُ خَرَجْتَ فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ الْحَرَامِ

என்பதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் மட்டுமே உரையாடப்பட்டுள்ளது. மேலும், அதற்கான காரணம் என்னவென்றால், இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்குப் பிறகு இந்த வடிவில் மக்கா வெற்றிக்கான அவசியம் எஞ்சியிருக்காது. ஏனெனில், அன்னாருக்கு பிறகு மக்காவின் மீது எந்த தாக்குதலும் நடைபெறபோவதில்லை. இன்னும் கூறுவதாயின், அது முழுமையான முறையில் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும் என்ற நிலை இருந்தது. ஆக, ஒருவகையில் எதிர்காலத்திற்கான ஒரு முன்னறிவிப்பும் செய்யப்பட்டுவிட்டது. அதாவது,புனித மக்கா நகரம் மீண்டும் ஒருமுறை பௌதீக வெற்றி கொள்ளப்பட மாட்டாது. ஏனெனில், மக்காவின் மகத்துவத்தை நிலைநாட்டக் கூடிய ஒரு செயல் மிக்க ஜமாஅத் உருவாக்கப்பட்டு விடும். மேலும், அது எப்போதும் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும். (தஃப்ஸீரே கபீர், தொகுதி 3, பக்கம் 11-18, 2022-ம் ஆண்டு பதிப்பு)

இந்த விளக்கமும், அறிமுகமும் ஏன் அவசியமாக இருந்தது? என்றால், எதிர்வரும் காலத்தில் மக்கா வெற்றியின் சம்பவங்களைப் பற்றிய குறிப்பு வரவிருக்கின்றது. அதில் இந்த பின்னணியிலிருந்து புரிந்து கொள்வது எளிதாக இருக்கும். மற்றவை இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் நாட்களில் எடுத்துரைப்பேன்.

தற்போது நான் ஒரு ஷஹீதைப் பற்றிய நற்குறிப்பை எடுத்துரைப்பேன். மேலும் தொழுகைக்குப் பிறகு அவர்களது ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். அது மதிப்பிற்குரிய ஷேக் முபஷ்ஷிர் அஹ்மத் ஸாஹிப் தெஹ்லவி அவர்களின் மகன் மதிப்பிற்குரிய டாக்டர் ஷேக் முஹம்மது மஹ்மூத் ஸாஹிப் அவர்களுடையதாகும். ஸர்கோதாவைச் சேர்ந்தவராக இருந்தார்கள். அன்னாரை அஹ்மதிய்யத்தின் எதிரிகள் மே 16-ம் தேதி துப்பாக்கியால் சுட்டு ஷஹீதாக்கிவிட்டனர். إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

விபரங்களில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: சம்பவ நாளன்று டாக்டர் ஸாஹிப் ஜுமுஆ தொழுது முடித்த பிறகு தமது குடும்பத்தினருடன் ஸர்கோதாவில் தாம் பணிபுரிந்து வந்த ஃபாத்திமா மருத்துவமனையை சென்றடைந்தார்கள். மருத்துவ மனையில் நுழைந்து முக்கிய நுழைவுவாயில் இடத்தை கடந்து சென்று கொண்டிருந்த போது, அவசரப்பிரிவிக்கு முன்னால் ........அடைந்து தமது அறையின் பக்கம் சென்று கொண்டிருந்தார்கள். அங்கு ஏற்கனவே காத்திருந்த அடையாளம் தெரியாத ஒரு நபர் அன்னாரை பின்தொடர்ந்து வந்தார். மேலும் அவர் ஷாப்பிங் பேக்கிலிருந்து துப்பாக்கியை எடுத்து முதுகில் சுட்டுவிட்டார். அன்னாருக்கு இரண்டு குண்டுகள் பட்டுள்ளது. அது உடலின் மறுபக்கம் வழியாக வெளியே

சென்றுவிட்டது. உடனடியாக அன்னார் சிவில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். ஆனால், காயங்களால் உயிர்பிழைக்க முடியாமல் போனது. மதிப்பிற்குரிய டாக்டர் ஸாஹிப் ஷஹீதாகிவிட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

சம்பவத்திற்கு பிறகு தாக்குதல் நடத்தியவன் ஆயுதத்தை காட்டிக் கொண்டு மருத்துவ மனையிலிருந்து வெளியில் நின்ற தனது கூட்டாளியுடன் மோட்டர் சைக்கிளில் தப்பி ஓடிவிட்டான். ஷஹாதத் நேரத்தில் மர்ஹூமின் வயது 58-ஆக இருந்தது. ஷஹீது மர்ஹூமுடைய குடும்பத்தில் அன்னாரின் தந்தை வழி கொள்ளுப் பாட்டனார் மதிப்பிற்குரிய பாபூ இஃஜாஸ் ஹூஸைன் ஸாஹிப் அவர்களின் சகோதரர் ஹஸ்ரத் ஸர் ஃபிராஸ் ஹூஸைன் ஸாஹிப் தெஹ்லவி (ரலி) அவர்களின் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. அன்னார் (ரலி) ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடத்தில் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைவதற்கான நற்பேறு பெற்றிருந்தார்கள். பின்னர் ஷஹீது மர்ஹூம் அவர்களின் பூட்டனார் மதிப்பிற்குரிய பாபூ இஃஜாஸ் ஹூஸைன் ஸாஹிப் தஹ்லவி அவர்கள் தமது சகோதரரின் மூலமாக பைஅத் செய்துவிட்டார்கள். ஷஹீது மர்ஹூம் அவர்களின் தந்தை வழி கொள்ளுப் பாட்டனார் பாபூ இஃஜாஸ் ஹூஸைன் ஸாஹிப் மற்றும் தந்தை வழிப் பாட்டனார் மதிப்பிற்குரிய பாபூ நஸீர் அஹ்மத் ஸாஹிப் இருவரும் ஒருவர் பின் மற்றொருவர் என்று அஹ்மதிய்யா ஜமாஅத் தில்லியின் அமீராக தொண்டாற்றும் நற்பேறு பெற்றுள்ளார்கள். ஷஹீது மர்ஹூம் அவர்கள் எஃப் ஸி. கல்லூரி லாஹூரிலிருந்து எஃப்.எஸ்.ஸி படித்தார்கள். பின்னர் ராவல்பிண்டி மெடிக்கல் காலேஜில் சேர்ந்தார்கள். மேலும் அங்கிருந்து 1990-ம் ஆண்டில் எம்.பி.பி. எஸ் பட்டம் பெற்றார்கள். மேலும் எம்.பி.பி.எஸ்ஸிற்கு பிறகு பஞ்சாப் ஸர்விஸ் கமிஷன் தேர்வில் தேர்ச்சி பெற்றார்கள். நான்கு ஆண்டுகள் சர்வீஸ் மருத்துவமனையிலும், ஜின்னா மருத்துவ மனை லாஹூரிலும் பணிபுரிந்தார்கள். 1998-ம் ஆண்டில் அன்னாருக்கு ராயல் காலஜ் ஆஃப் பிஸீஷியன்ஸ் யூ.கேவில் மெம்பர்ஷிப் கிடைத்து. மேலும், 2021-ம் ஆண்டு ஃபெல்லோஷிபின் கௌரவ விருதும் கிடைத்தது. ஷஹீது மர்ஹூம் 2001-ம் ஆண்டு ஸர்கோதாவிற்கு இடம் மாற்றம் ஆனார்கள். ஸர்கோதாவிற்கு ஷிஃப்ட் ஆனதன் பின்னணியில் மனிதகுல சேவைக்கான அம்சம் வெளிப்படையாக இருந்தது. ஸர்கோதா மாவட்டத்திற்கு முன்னர் கல்லீரல் மற்றும் இரைப்பை நோய்க்கான சிறப்பு மருத்துவராக அன்னார் இருந்தார்கள். ஸர்கோதாவில் ஒரு தனியார் மருத்துவ மனையில் பணியில் சேர்ந்திருந்தார்கள். அந்த மருத்துவ மனையின் முதலாளியுடன் டாக்டர் ஸாஹிபுக்கு மிகவும் நல்ல தொடர்புகள் இருந்தன. ஆனால், அந்த நபருக்கு சில அரசியல் பின்புலம் இருந்தது. 2018-ம் ஆண்டில் பாரளுமன்ற தேர்தலில் அவர் பங்கு பெற இருந்தார்.அரசியல்வாதியாக இருந்தார். நாங்கள் இதை செய்துவிடுவோம்; அதை செய்து விடுவோம் என்று அவருக்கு மவ்லவிகள் மிரட்டல்கள் விடுத்து வந்தனர். எனவே அவர் டாக்டர் ஸாஹிபிடம், நீங்கள் மருத்துவ மனையை விட்டு விடுங்கள் ; இது எனது நிர்பந்தமாகும். இனி நீங்கள் எங்களுடன் பணி புரிய முடியாது என்று கூறினார். எவ்வாறிருப்பினும், அங்கிருந்து டாக்டர் ஸாஹிப் விலகி விட்டார்கள். பின்னர் அன்னார் வேறொரு மருத்துவ மனையில் பணியில் சேர்ந்தார்கள்.

2001-ல் இவர்கள் ஸர்கோதாவில் இடம் மாற்றம் ஆனதிலிருந்து தொடர்ச்சியாக ஃபஸ்லே உமர் மருத்துவ மனை ரப்வாவிலும் விஸிட்டிங் டாக்டர் என்ற ரீதியில் நேரம் கொடுத்து வந்தார்கள். மேலும், அல்லாஹ் அன்னாரது கையில் குணம் வைத்திருந்தான். பெரும் எண்ணிக்கையிலான நோயாளிகள் அன்னாரிடமிருந்து பலன் பெற்று வந்து கொண்டிருந்தார்கள். உலகியல் கல்வி மட்டுமின்றி அன்னாருக்கு மார்க்க அறிவும் அதிகமாக இருந்தது. திருக்குர்ஆன் விளக்கவுரை, தஸ்கிரா, ரூஹானீ கஸாயீன் உட்பட ஏனைய ஜமாஅத் நூல்கள் மற்றும் கருத்து வேறுபாடுகள் கொண்ட விவகாரங்களை உள்ளடக்கிய நூல்களை மிகவும் அதிகமாக படித்திருந்தார்கள். ஷஹீது மர்ஹூம் அவர்களுக்கு நாயிப் அமீர் ஸர்கோதா மாவட்டம் என்ற ரீதியில் தொண்டாற்றுவதற்கும் நற்பேறு கிடைத்தது. மெடிக்கல் அஸோஷியேஷன் நிறுவப்பட்ட பிறகு அதன் உறுப்பினராக அன்னார் இருந்தார்கள். 2024-ல் இவர்கள் நாயிப் சத்ர் அஸோஷியேஷனாக நியமிக்கப்பட்டார்கள். மேலும், ஸர்கோதா சேப்டருடைய சத்ராகவும் இருந்தார்கள். கடந்த மூன்று ஆண்டுகளாக அன்னாருக்கு புற்றுநோய் துன்பமும் இருந்தது. அதன் பிறகும் கூட எப்போதும் தமது நோயை விட பிறருடைய நோய்க்கு முன்னுரிமை வழங்கினார்கள். மேலும், எப்போதும் தொண்டாற்றுவதற்கு தயாராக இருந்து வந்தார்கள். நோயாளிகளுடன் அனுதாபம், அன்பு, மேலும் தேவையுடையவர்களுக்கு இலவச சிகிச்சை செய்வது போன்றவை அன்னாரின் சிறப்புப் பண்புகளாக இருந்தன. தேவையுடைய நோயாளிகளுக்கு இலவச சிகிச்சை மட்டுமின்றி, அவர்கள் திரும்பி செல்வதற்கு பயணச் செலவும் கொடுத்து வந்தார்கள். இன்னும் கூறப்போனால், சில பரிசோதனைகளை இலவசமாக செய்து கொடுத்து வந்தார்கள். மேலும் அதற்கான பணத்தையும் கொடுத்து வந்தார்கள். ஏற்கனவே கூறப்பட்டது போன்று, ஸர்கோதா மாவட்டத்திற்கு முன்னர் கல்லீரல் மற்றும் இரைப்பை நிபுணராக இருந்தார்கள். பொருளாதார ரீதியாக ஏழைப் பெண் பிள்ளைகளின் திருமணங்களில் மறைவாக அவர்களுக்கு பெரும் உதவிகளை செய்து வந்தார்கள்.

எழுதப்பட்டுள்ளது: ஓர் ஏழைக்கு நீண்ட காலமாக தொடர்ந்து பொருளாதார உதவி செய்து கொண்டிருந்தார்கள். முதலில் அந்த நபரோ மாதத்தில் ஒருமுறை வந்து கொண்டிருந்தார். பின்னர் அவர் ஒவ்வொரு இரண்டாம் நாளில் அல்லது மூன்றாம் நாள் வரத் துவங்கிவிட்டார். ஆனால், அதன் பின்னரும் அன்னார் அவருக்கு உதவி செய்து கொண்டிருந்தார்கள். டாக்டர் ஸாஹிப் பொதுவாக கோபப்பட்டது கிடையாது. மிகவும் மென்மையான உள்ளம் படைத்தவராக இருந்தார்கள். ஒருநாள் அந்த நபர் ஒரு விஷயத்தில் அதிகம் பிடிவாதம் பிடித்திருப்பார் போலும்! அப்போது, ஏதோ கடினமான வார்த்தை அன்னாரின் வாயிலிருந்து வெளிப்பட்டு விட்டது. ஆனால், இயல்பில் மென்மையும், நன்மையும் இருந்தது. அதனால் முழு இரவும் நிம்மதியிழந்தவராக இருந்தார்கள். மேலும், நான் ஏன் இந்த விஷயத்தை கடினமாக கூறிவிட்டேன் என்று மிகவும் கவலையில் இருந்தார்கள். அடுத்த நாள் அந்த நபரை அழைத்தார்கள். மேலும் அவரிடம் வருத்தம் தெரிவித்தார்கள். மேலும் மீண்டும் அவருக்கு பொருள் உதவியாக போதுமான தொகையை கொடுத்தார்கள்.

ஜமாஅத் சான்றோர்களுடன் மிகவும் பற்று மிக்க தொடர்பு கொண்டிருந்தார்கள்.தேவைப்படும் போது ரப்வாவிற்கு சென்று சிறப்பான முறையில் நோயாளிகளை பரிசோதித்து சிகிச்சை செய்து வந்தார்கள்.

ஷஹீது மர்ஹூம் அவர்களின் தாயார் மதிப்பிற்குரிய அமத்துல் ஹய் ஸாஹிபா கூறுகின்றார்கள்:

மர்ஹூம் பெற்றோர்களுக்கு மிகவும் மரியாதை செலுத்தி வந்தார்கள். கேட்காமலேயே அன்னார் எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்து வந்தார்கள். நாங்கள் ஒருபோதும் அவரிடம் (தேவைகளை) கேட்டது கிடையாது; ஆனால், அவர் அதை பூர்த்தி செய்து வந்தார். சிறுவயது முதலே எண்ணற்ற சிறப்புகளை கொண்டவராக திகழ்ந்தார்கள். தமது பணியில் மட்டும் கவனம் கொண்டவராக இருந்தார்கள். மேலும், கிலாஃபத்துடன் எல்லையற்ற நேசமும் கொண்டிருந்தார்கள். ஏழைகள் மற்றும் நோயாளிகளை மிகவும் கருத்தில் கொண்டிருந்தார்கள். பணம் கொடுக்கல் வாங்கலில் முழுமையான கணக்கை வைத்திருந்தார்கள். குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களையும் பரஸ்பரம் இணைத்து வைத்திருந்தார்கள்.

அன்னாரின் மனைவி அமத்துன் நூர் ஸாஹிபா கூறுகின்றார்கள்: ஜமாஅத் அமைப்புடன் இணைந்திருப்பதற்கு எப்போதும் பிள்ளைகளுக்கு அறிவுறுத்தி வருவார்கள். கிலாஃபத்துடன் உத்வேகம் மிக்க பற்று கொண்டிருந்தார்கள். தொடர்ச்சியாக குத்பாக்களை கேட்டு வந்தார்கள். மேலும் பாயின்ட்களை தமது டைரியில் குறிப்பு எடுத்து வந்தார்கள்.

இவ்வாறு செய்யக் கூடிய மக்கள் மிகக் குறைவானவர்களே இருக்கின்றனர். இன்னும் கூறப்போனால், வாழ்வை அர்ப்பணித்தவர்கள் கூட அவ்வாறு செய்வதில்லை. பயனடைய வேண்டும் என்பதற்காக குத்பாக்களில் பாயின்ட்களை (குறிப்பு) எடுத்து வந்தார்கள். சந்தாக்களை செலுத்துவதிலும் முன்மாதிரியாக இருந்தார்கள். ஷஹீத் ஆன நேரத்தில் 2025-ம் ஆண்டிற்கான சந்தா வஸிய்யத்தின் அனைத்து கணக்கு வழக்குகளும் சரியாக இருந்தன.

அன்னாருக்கு 4 பிள்ளைகள் இருக்கின்றனர். இரண்டு மகன்களும், இரு மகள்களும் உள்ளனர். அன்னாருடைய ஒரு மகன் மருத்துவர் பஸீர் ஆவார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்:

எப்போதும் எங்களுக்கு கிலாஃபத்துடன் தொடர்பு வைப்பதற்கு அறிவுறுத்தி வந்தார்கள்.

அன்னாரின் மகள் ஸாயிமா ஆவார். அவர் கூறுகின்றார்:

மிகவும் பரிவு மிக்க தந்தையாக இருந்தார்கள். எனது திருமணத்தின் போது, இவ்வாறு எனக்கு அறிவுரை செய்தார்கள்; மகளே! உனது மாமனார் வீட்டில் சென்று

*திருக்குர்ஆனிலிருந்து...*

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

எப்போதும் ஜமாஅத் அமைப்புடன் தொடர்புடையவராக இருக்க வேண்டும். எப்போதாவது ஏதாவது வகையில் ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் கண்ணியம் கிடைத்தால் அதனை ஒருபோதும் மறுக்கக் கூடாது பொதுவாக கூறுகின்றார்கள்:

தந்தையார் பொதுவான பணிகளிலும் கூட ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் அம்சத்தை உருவாக்கி வந்தார்கள்.

அன்னாருடைய ஒரு மருமகள் இருக்கின்றார். அவர்கள் கூறுகின்றார்:

அல்லாஹ்வின் மீதான உறுதியான நம்பிக்கையில் அதிகம் அழுத்தம் கொடுத்து வந்தார்கள். எப்போதாவது, ஏதாவது விவகாரத்தில் வழிகாட்டல் வழங்கும்படி விண்ணப்பித்தால், அன்னார் துஆவிலிருந்து தமது கூற்றை தொடங்கி துஆவுடன் நிறைவு செய்வார்கள்.

அன்னாரின் ஒரு சகோதரி இருக்கின்றார். அவர் கூறுகின்றார்:

ஜமாஅத்திற்கு எதிரான நடவடிக்கைகளை கண்டு மிகவும் கவலை கொண்டிருந்தார்கள். இரவில் எழுந்து நஃபில் தொழுவதும், தஹஜ்ஜுத் தொழுவதும் அன்னாரின் அன்றாட வழக்கமாக இருந்தது.

ஸர்கோதா மாவட்ட அமீர் காலித் மஹ்மூத் ஸாஹிப் கூறுகின்றார்கள்:

ஏழைகளின் துயர் துடைப்பவராகவும் மகத்தான மனிதராகவும் இருந்தார்கள். மக்களுக்கு பயனளிக்கக் கூடியவராக இருந்தது மட்டுமின்றி பணிவு மற்றும் தன்னடக்கம் அன்னாரின் சிறப்பு பண்பாக இருந்தது. சந்தாக்களின் வாக்குறுதிகளுக்கு ஏற்ப சந்தாக்களை செலுத்துவது மட்டுமின்றி கூடுதல் சந்தாக்கள் என்ற ரீதியிலும் சிறப்பு ஒத்துழைப்பு வழங்கி வந்தார்கள். ஜமாஅத் பொறுப்பாளர்களுக்கு மிகுந்த கண்ணியம் அளித்து வந்தார்கள்.

அங்கு ஸர்கோதாவில் ஸுபைர் ஸாஹிப் அவர்கள் ஜமாஅத்தின் முரப்பி ஆவார்கள். கூறுகின்றார்கள்:

எங்களது மிகவும் நேசத்திற்குரியவர், மனித குலத்தின் சேவகர், கருணை மற்றும் பரிவின் வடிவம், லட்சக்கணக்கான நபர்களின் துயர் துடைப்பவர், கிலாஃபத்தின் விசுவாசி, மனித வடிவிலான வானவர் எங்களை விட்டு பிரிந்து விட்டார்!

ஷஹீது மர்ஹூம் எளிமையான மனிதராக இருந்தார்கள். அன்னாரின் வாழ்வின் எல்லா அம்சமும் முன்மாதிரியாக இருந்தது. அன்னாரிடத்தில் யாராவது ஒரு பொறுப்பாளரோ அல்லது வாழ்வை அர்ப்பணித்தவரோ சென்றால் நாற்காலியில் இருந்து எழுந்து நின்று விடுவார்கள். மேலும் வழியனுப்பும் நேரத்திலும் கூட வாசல் வரை வந்து விட்டு செல்வார்கள். கூறுகின்றார்கள்:

நிலைமை மோசமாக இருக்கின்றது; எனவே தற்காப்பின் தேட்டங்களை முழுமை செய்யும் பொருட்டு உங்களுடன் மெய்க்காப்பாளராக யாரையாவது வைத்துக் கொள்ளுங்கள் அல்லது ஊழியரை வைத்துக் கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு இதன் பக்கம் கவனமூட்டப்பட்ட போது, டாக்டர் ஸாஹிப் எப்போதும் இதனையே பதிலாக கூறிவந்தார்கள். அதாவது, நான் எந்த மெய்காப்பாளரையோ அல்லது ஊழியரையோ என்னுடன் பாதுகாப்பிற்காக வைத்துக் கொள்கிறேன். ஆனால், எதிர்பாராத விதமாக ஒருவர் என்னை கொலை செய்ய வந்து என் காரணமாக வேறு ஒருவரின் உயிர் பறிபோவதை என்னால் சகித்துக் கொள்ள முடியாது.

இதுவே அன்னாரின் பதிலாக இருந்து வந்தது. உள்ளபடியே அன்னாரை கொலை செய்ய வேண்டும் ; இது தான் தண்டனை ஆகும் என்று எதிரிகள் அன்னாருக்கு எதிராக மாவட்டம் முழுவதும் பிரசுரங்கள் வழங்கி இருந்தனர். ஆனால், இதன் பிறகும் கூட அன்னார் ஒருபோதும் கவலைப்படவில்லை. மேலும், அஹ்மதிகள், அஹ்மதி மருத்துவர்கள் என்று எதிரிகள் ஒரு பட்டியலை உருவாக்கி வைத்திருந்தனர். அதில் டாக்டர் ஸாஹிப் அவர்களின் பெயர் முதலில் இருந்தது. அவர்களை டார்கெட் செய்ய இருந்தனர். இன்னும் கூறப்போனால், அங்கு ஒரு மவ்லவிமார்களின் கூட்டம் இருக்கின்றது. அக்கூட்டம் அன்னாரை கொலை செய்யப்பட வேண்டியவர் என்று ஃபத்வா வழங்கி இருந்தது. பின்னர் அந்த ஃபத்வாவை விநியோகமும் செய்திருந்தனர். ஆனால், அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஃபாத்திமா மருத்துவமனை என்பது கிறிஸ்தவ மருத்துவமனையாகும். அதன் அட்மினிஸ்ரேட்டராக இருக்கின்ற பாதிரி ஸாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:

மனிதகுல சேவகரான ஒரு மனிதர் நம்மை விட்டு பிரிந்து விட்டார். எங்களது உள்ளம் கடும் வேதனையால் நிறைந்திருக்கின்றது.

இன்னும் கூறப்போனால், இவர்கள் கிறிஸ்தவ ஆவார்கள். அவர்கள் மருத்துவ மனையின் மேலாளரும் ஆவார்கள். இவர்கள் தமது மற்ற தோழர்கள் மற்றும் நிர்வாக ஊழியர்களுடன் மர்ஹூம் அவர்களின் ஜனாஸாவில் ரப்வாவிற்கு வருகை தந்திருந்தார்கள்.

சமூக ஊடகங்களும், அச்சு ஊடகங்களும் டாக்டர் ஸாஹிப் அவர்களின் ஷஹாதத் குறித்து கவர் (ஆங்கிலம்) செய்துள்ளன.

ஒரு அஸிஸ்டன்ட் கமிஷனர் இருக்கின்றார். அவர் தமது பதிவில் இவ்வாறு எழுதியுள்ளார். ஆனால், இந்த மக்களால் எழுத மட்டுமே முடியும்; வேறு எதுவும் செய்ய முடியாது. ஏனெனில், மவ்லவிகளுக்கு முன்னால் நிற்பதற்கு அல்லது அவர்களுக்கு எதிராக தீர்மானம் எடுப்பதற்கு தைரியம் கிடையாது. ஆனால், எவ்வாறிருப்பினும், இதுவும் கூட அவர்களின் துணிச்சலாகும். அதாவது பெண்ணாக இருந்த பிறகும் இவர்கள் தமது பதிவில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

ஷேக் மஹ்மூத் ஏழைகளின் துயர் துடைப்பவராக இருந்தார்கள். மிகவும் சிறந்த மெடிக்கல் நிபுணராக இருந்தார்கள். சிலமுறை விலையுயர்ந்த பரிசோதனைகளையும் கூட ஏழைகளுக்கு இலவசமாக செய்து வந்தார்கள். முழு மாவட்டத்திலும் டாக்டர் ஸாஹிப் அவர்களிடம் சிகிச்சை செய்து கொள்ளாத ஒரு வீடு கூட அநேகமாக இருக்காது.

இவர்கள் ஜமாஅத்தை சாராத நபர் ஆவார்கள். ஆனால், புகழ்ந்து பேசுகின்றார்கள்.

கூறுகின்றார்கள்: பெரும்பாலும் இலவச சிகிச்சை செய்து வந்தார்கள். மேலும் இது மாபெரும் பணியாகும். எனக்கு இதனாலும் இந்த விஷயத்தை பற்றி தெரியும். ஏனெனில் நான் சுயமே மருத்துவர் ஆவேன். டாக்டர் ஸாஹிப் வேறு எங்கேயாவது, வேறு நாட்டிற்கு சென்றிருந்தால் ஏராளமான பணத்தை சம்பாதித்து இருக்க முடியும். மேலும், சுகபோகமான வாழ்வை கழித்திருக்க முடியும். ஆனால், அன்னார் இங்கு ஸர்கோதாவில் மனிதகுலத்திற்கு தொண்டாற்றுவதற்கு முன்னுரிமை வழங்கினார்கள்.

கூறுகின்றார்கள்: இன்று முதல் முறையாக ஒரு மனிதர் மரணத்திற்காக நான் கண்ணீர் வடித்து அழுகின்றேன். அவருடன் எனக்கு எந்த தனிப்பட்ட உறவும் கிடையாது. வெறும் மனிதத்துவத்தின் உறவு மட்டுமே இருந்தது. அந்த நபருக்கு அல்லாஹ்வின் அடியார்கள் மீது ஏராளமான கருணை இருந்தது. அவருடைய குற்றம் என்னவாக இருந்தது? என்று நீங்கள் கேட்டால், அவர்களின் குற்றம் அஹ்மதியாக இருந்தது தான் என்பது பதிலாகும்.

மற்றுமொரு மருத்துவர் இருக்கின்றார்கள். அன்னார் எழுதியுள்ளார்கள்: டாக்டர் மர்ஹூம் ஸாஹிப் ஸர்கோதாவின் முதல் ERCP செய்யக் கூடிய மெடிக்கல் ஸ்பெஷலிஸ்ட் ஆக இருந்தார்கள். இவ்வளவு தகுதி வாய்ந்த மற்றும் சீனியராக இருந்த பின்னரும் இன்றும் கூட ஸர்கோதாவில் எல்லாரையும் விட குறைந்த செலவில் புரோஸிஜர் செய்து வந்தார்கள். கொள்கை வேறாக இருந்ததன் காரணமாக கொலை செய்யப்பட்டு விட்டார்கள். இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு என்று ஏதாவது இருக்கின்றதா?

ஒரு தனியார் சேனலின் ஒரு பத்திரிகையாளர் எழுதியுள்ளார்:

மிகவும் வேதனையான மற்றும் கண்டனத்திற்குரிய இந்த காட்டுமிராண்டித்தனமான செயல். இந்த கொலையை கண்டிப்பதற்கு என்னிடம் வார்த்தைகள் இல்லை.

மற்றுமொரு பத்திரிகையாளர் எழுதுகின்றார்: தற்போது அதிகம் நடந்து விட்டது. பாகிஸ்தானை காப்பாற்றுவதற்காக பயங்கரவாத குழுக்கள் மற்றும் அமைப்புகளை தடை செய்ய வேண்டும். அடிப்படை மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். மேலும் அஹ்மதிகளுக்கு எதிரான இது போன்ற நடவடிக்கைகளை தடுப்பதற்காக பயங்கரவாத அமைப்புகளுக்கு தடை விதிப்பது அவசியமாகும். ஆனால், பெயர் தாங்கி மார்க்க குத்தகைதாரர்கள் மீதான அச்சம் எந்த அளவுக்கு உள்ளது என்றால், அரசாங்கம் கூட செயலற்றதாக உள்ளது.எந்த அளவுக்கு என்றால் சட்டத்தை அமல்படுத்தும் நிறுவனம் கூட செயலற்றதாக உள்ளது. மேலும் நீதிமன்றங்களும் கூட செயலற்றதாக இருக்கின்றன.

அல்லாஹ் விரைவாக இனி இந்த பயங்கரவாதிகளை பிடிப்பதற்கான ஏற்பாட்டை செய்வானாக! மேலும் உண்மையான பயங்கரவாதிகளாகிய இந்த பெயர் தாங்கி மார்க்கவாதிகளிடமிருந்தும், மார்க்கத்தின் பெயரால் பயங்கரவாதத்தை நிகழ்த்தக் கூடியவர்களிடமிருந்தும் விடுதலை பெறுவது நாட்டை பாதுகாப்பதற்கு அவசியமாகும். ஏனெனில், இவர்கள் நாட்டை அழிப்பதில் மூழ்கி கிடக்கின்றனர். மேலும், எல்லா இடத்திலும் தங்களுக்கு எதிராக இருக்கின்றவர்கள் மீது இவர்கள் தாக்குதல் நடத்துகின்றனர். எவ்வாறு இருப்பினும், நமது முறையீடுகளோ அல்லாஹ்வின் முன்னிலையில் உள்ளன.

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

மேலும் அதற்கான முழுமையான உரிமையை நாம் செலுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் ஷஹீது மர்ஹூமுடைய அந்தஸ்துகளை உயர்த்துவானாக! அவர்களின் உறவினர்களுக்கு பொறுமையையும், தைரியத்தையும் வழங்குவானாக! அன்னாரின் தாயார் வயது முதிர்ந்தவர் ஆவார்கள். அன்னாருடைய வேதனையை அல்லாஹ் எளிதாக்குவானாக! அன்னாருடைய மனைவி மற்றும் அன்னாருடைய பிள்ளைகளுக்கு அனைவருக்கும் அல்லாஹ் தனது பாதுகாப்பில் வைப்பானாக!

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், ஜுன் 13, 2025, பக்கம் 2 -6)

தமிழாக்கம்

A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *

## 1- ம் பக்கத் தொடர்ச்சி....(மல்ஃபூஸாத்)

அசல் விஷயம் இதுவாகும். தர்பிய்யத் வழங்குபவரின் ஆற்றலின் தாக்கமும் ஏற்படுகின்றது. எந்த அளவிற்கு முரப்பி எனும் தர்பிய்யத் வழங்குபவர் தாக்கம் நிறைந்த ஆற்றல் கொண்டவராகவும், முழுமையானவராகவும் இருப்பாரோ அதேபோன்று அவரது தர்பிய்யத்தின் தாக்கம் உறுதியானதாகவும், வலிமையானதாகவும் இருக்கும்.

நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த ஆற்றல் முழுமையானதாகவும், எல்லாரையும் விட அதிகமாகவும் இருப்பதற்கான ஒரு சான்று இதுவாகும். அதாவது, அன்னாரால் தர்பிய்யத் பெற்ற கூட்டத்தினரிடத்தில் எந்த அளவிலான உறுதிப்பாடும், வலிமையும் இருந்தது என்றால், அது அவர்களுக்கு தமது உயிரையும், செல்வத்தையும் கொடுப்பதற்கும் தயங்காதவர்களின் மைதானத்தில் நிரூபணமானது. மேலும், மஸீஹூடைய குறைபாட்டிற்கான சான்று இதுவாகும். அதாவது, அவர் தயார் செய்த கூட்டத்தினரே காட்டி கொடுக்கக் கூடியவர்களாகவும், உயிரை பறிக்கக் கூடியவர்களாகவும், சாபமிடக் கூடியவர்களாகவும் நிரூபணமானது.

சுருக்கமாக, இறைத் தூதர் (ஸல்) அவர்களின் ரஹீமிய்யத்தின் தாக்கம் இவ்வாறாக இருந்தது. அதாவது, ஸஹாபிகளிடத்தில் உறுதிப்பாடும், உறுதியும் இருந்தது. பின்னர் مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ . என்பதன் செயல் வெளிப்பாடாக ஸஹாபிகளின் வாழ்க்கையில் இவ்வாறு நிகழ்ந்தது. அதாவது, இறைவன் அவர்களுக்கும், அந்நியர்களுக்கும் மத்தியில் வித்தியாசத்தை வைத்தான். அல்லது அவர்களுக்கு வழங்கப்பட்ட இறைஞானம் மற்றும் இறைநேசம் என்பது அவர்களுக்கு உலகில் வழங்கப்பட்ட நற்கூலியாக இருந்தது.(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 71, 2018-ம் ஆண்டு பதிப்பு)

* * * * * * * *




## 1- ம் பக்கத் தொடர்ச்சி....(தஃப்ஸீரே கபீர்)

அனைத்து பொருள்களும் தவறானவையாகும்.

திருக்குர்ஆனிலும், ஹதீஸ்களிலும் வேலையாட்கள் மற்றும் அடிமைகளை தனித்தனியாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே பணியாட்கள் இதில் அடங்கமாட்டார்கள். மேலும், அடிமைகள் தொடர்பாக திருக்குர்ஆன் தெளிவாக இவ்வாறு கூறுகின்றது:

مَا كَانَ لِنَبِيٍّ اَنۡ يَّكُوۡنَ لَهٗۤ اَسۡرٰى حَتّٰى يُثۡخِنَ فِى الۡاَرۡضِ

பொருள்: ஒரு நபிக்கும் அவரது எதிரிக்கும் மத்தியில் இரத்தம் சிந்தும் போர் நிகழாமல் அவர் ஒரு சமுதாயத்தை சார்ந்தவர்களின் ஆண் போர்க் கைதிகளையோ அல்லது பெண் போர்க் கைதிகளையோ வலுக்கட்டாயமாக பிடித்துக் கொண்டு வருவது அவருக்கு ஆகுமானது கிடையாது.

அதாவது போர் புரியாத ஒரு சமுதாயத்திலிருந்து கைதிகளை பிடித்துக் கொண்டு வருவது ஆகுமானது கிடையாது. உதாரணமாக, நூற்றுக்கணக்கான வருடங்களாக ஹிஜ்ஜாஸ் வாசிகள் ஹப்ஷா கோத்திரத்தைச் சார்ந்தவர்களிலிருந்து அடிமைகளை பிடித்துக் கொண்டு செல்வது போன்று அல்லது கடந்த நூற்றாண்டுகளில் ஈராக் வாசிகள் ஈரான் அல்லது ரோமிலிருந்து அல்லது யூனானிலிருந்து அல்லது இத்தாலியின் தீவுகளிலிருந்து அடிமைகளை பிடித்துக் கொண்டு சென்று வந்ததைப் போன்று பிடித்து செல்லக் கூடாது. அதுபோன்ற அடிமைத்துவம் இஸ்லாத்தில் ஆகுமற்றதாகும். போர்க் கைதிகளை பிடிப்பது மட்டுமே ஆகுமானதாகும். அதுவும் கூட எதிரியுடன் முறையாக போர் நிகழ்ந்து விடும்போதுதான் ஆகுமானதாகும். மேலும் அதுபோன்ற நேரங்களிலும் இவ்வாறு கட்டளை உள்ளது. அதாவது, இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொண்டு போர்க் கைதிகளை விட்டு விட வேண்டும். ஒருவேளை அவரிடம் ஃபித்யா எனும் இழப்பீட்டுத் தொகை இல்லையென்றால் அல்லது அவரது சமுதாயத்தில் அவருக்கான ஃபித்யாவை கொடுப்பதற்கு எவரும் தயாராகவில்லை என்றால், பின்னர் இஸ்லாமிய அரசாங்கம் அவரை கருணையுடன் விடுதலை செய்துவிடட்டும்.(சூரா முஹம்மத்)

கருணையின் அடிப்படையில் அவரை விடுவிப்பது அவருக்கு கஷ்டம் என்றால், பின்னர் ஸகாத் பணத்திலிருந்து அவருக்கான இழப்பீட்டுத் தொகையை செலுத்தி அவரை விடுவிக்கட்டும். (சூரா அத்தவ்பா:)

இதுவும் கடினம் என்றால் பின்னர் கைதிக்கு முகாதிபத் செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். (சூரா: அந்நூர்)

முகாதிபத் என்பதன் பொருள் இவ்வாறாகும். அதாவது போர்க் கைதிகள் தமது எஜமானிடம், நீங்கள் என்னை விடுவித்து விட்டால் நான் எனது உழைப்பாலும், சம்பாதியத்தாலும் எனது ஃபித்யாவை செலுத்தி விடுவேன் என்று கூறுவதாகும். அது வரை அவர் அவரது வியாபாரம் போன்றவற்றில் சுதந்திரமானவராக கருதப்படுவார். அதே நேரம் இஸ்லாமிய நாட்டில் வசிப்பதற்கு மட்டுமே அவர் கட்டுப்பட்டவராவார். தற்போது இந்த விஷயம் தெளிவாகியுள்ளது. அதாவது, மேற்குறிப்பிட்ட எந்த வழிமுறைகளுக்குப் பின்னரும் ஒரு பெண் விடுதலை ஆக விரும்பவில்லை என்றால், பின்னர் அந்தப் பெண்ணோ எப்படிப்பட்டவராக இருப்பார் என்றால், அவர் தமது நாட்டிற்கு செல்வதில் தனக்கு ஆபத்து இருப்பதாக கருதக் கூடியவராக இருப்பார். மேலும் முஸ்லிமிடத்தில் இருப்பதில் என்ன அபாயம் இருந்ததோ அதிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்கான வழி திறந்த பின்னரும் அதனை பயன்படுத்த அவர் விரும்பவில்லை. மேலும், எந்தப் பெண் எல்லா வாய்ப்புகளுக்கு பின்னரும் முஸ்லிம் வீட்டிலிருந்து வெளியேறுவதை விரும்பவில்லையோ அந்நிலையில் அந்தப் பெண்ணை வலுக்கட்டாயமாக திருமணம் செய்வதை தவிர்த்து அந்த முஸ்லிம் ஆணிற்கு வேறு வழியில்லை. ஏனெனில் அந்தப் பெண் விடுதலை ஆகவில்லையென்றால், மேலும், அவருடன் பலவந்தமாக முஸ்லிம் ஆண் திருமணம் செய்யவில்லை என்றால் பின்னர் அந்தப் பெண்ணோ வீட்டிலும், அந்தப் பகுதியிலும் விபச்சாரத்தை பரப்புவார். மேலும் இஸ்லாம் அதனை அனுமதிப்பதில்லை. எனவே சுதந்திரமான பெண்கள் மற்றும் போர்க் கைதிகளான பெண்களுக்கும் இவ்வளவு தான் வித்தியாசம் இருக்கின்றது: அதாவது, சுதந்திரமான பெண் தமது விருப்பத்துடன் நிக்காஹ் செய்து கொள்வது ஆகுமானதாகும். மேலும், போர்க் கைதியாக இருக்கின்ற அந்தப் பெண்ணோ ஒன்று இஸ்லாம் அவருக்காக திறந்து கொடுத்துள்ள வழிமுறைகளின் மூலமாக தன்னைத் தானே விடுவித்துக் கொள்கின்றனர். அவற்றை இஸ்லாம் அவருக்காக திறந்து கொடுத்துள்ளது. அல்லது, அந்தப் பெண் எந்த வீட்டில் இருக்கின்றாரோ அதனுடைய ஆண் ஒருவர் அவருடன் திருமணம் செய்து கொண்டுவிடுகின்றார். அப்போதுதான் சமூகத்தில் விபச்சாரம் பரவாது. மேலும் அவருக்கு குழந்தை பிறந்தால் விட்டால் பின்னர் அவர் சுதந்திரமானவர் ஆவார். எனவே வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்கள் என்ற சொற்களிலிருந்து எவரும் ஏமாற்றத்திற்கு ஆளாகி விட வேண்டாம். இந்த சொற்களின் பொருள் அடிமைத்துவம் என்பதல்ல. இன்னும் கூறப்போனால், இஸ்லாத்தில் அடிமைத்தவம் ஆகுமானதல்ல. (தஃப்ஸீரே கபீர், தொகுதி 6, பக்கம் 129, காதியான் பதிப்பு, 2010-ம் ஆண்டு)

* * * * * * * *

## 12ம் பக்கத் தொடர்ச்சி.. (இஸ்லாமிய ஒழுக்கங்கள்....)

காலையில் எழும்போது அவனது பற்களில் பல்வேறு தரப்பட்ட 600 ஸ்பீஷீயஸ் (species) -ன் எண்ணிலடங்கா பாக்டீரியாக்கள் இருக்கின்றன. பற்களில் ஒட்டியிருக்கக் கூடிய ஸ்பிஷீயஸ் மட்டும் 600 இருக்கின்றன. ஆனால், பாக்டீரியாக்களின் எண்ணிக்கை எத்தனை? என்று தெரியாது. ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 1500 வருடங்களுக்கு முன்னரே நமக்கு, தூங்கி எழும்போது முதலில் பல் துலக்குங்கள் என்று கூறியுள்ளார்கள்.

(குத்பா பேருரை, ஏப்ரல் 23,2004)

* * * * * * *



## இஸ்லாமிய ஒழுங்குமுறைகளும் நல்லொழுக்கங்களும்

**(உண்ணுதல் பருகுதல் தூய்மை பாதையின் உரிமை பார்வையை தாழ்த்தி வைத்தல் மஜ்லிஸின் ஒழுங்கு முறைகள் மற்றும் பள்ளிவாசலின் ஒழுங்குகள்)**

(மதிப்பிற்குரிய மவ்லானா அதாவுல் முஜீப் ஸாஹிப் லோன், பிரின்ஸிபல், காதியான் ஜாமிஆ அஹ்மதிய்யா)

**காதியான் ஜல்ஸா சொற்பொழிவு - 2024**

காலத்தின் இமாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

الطریقة کلہا ادب

(மல்ஃபூஸாத், தொகுதி 3, பக்கம் 640, 1988-ம் ஆண்டு பதிப்பு)

அதாவது ஆன்மிகத்தின் எல்லா வித அடித்தளமும் மரியாதை மீது அதாவது ஒழுக்கத்தின் மீதுதான் அமைந்துள்ளது. ஆன்மிகத்தின் முன்னேற்றத்திற்கு நம் மீது கடமை என்னவென்றால், நாம் இஸ்லாம் கூறும் ஒழுக்கங்களை கவனத்திற் கொள்ள வேண்டும். இந்த திறவுகோல் மூலமாகவே நாம் முழுமையான நல்லொழுக்கத்தின் பக்கம் நமது பாதங்களை முன்னால் எடுத்து வைக்க முடியும். அடுத்து, ஆன்மிகத்தின் உயர் படித்தரங்களின் பக்கம் முன்னேற முடியும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆன் எல்லா விதமான ஒழுக்கங்களையும் (அதாவது ஒழுங்கு முறைகளையும்) போதிக்கின்றது. அதனை அறிவது ஒரு மனிதன் மனிதனாக ஆகுவதற்கு மிகவும் அவசியமாகும். இன்று வலுவாக பரவியுள்ள ஒவ்வொரு தீமைகளையும் அதே வலிமையைக் கொண்டு எதிர்க்கின்றது. இதன் போதனைகள் மிகவும் உறுதியானதும், வலுவானதும், எளிமையானதும் ஆகும். இது இயற்கைச் சட்டத்தின் ஒரு கண்ணாடி ஆகும். இயற்கைச் சட்டத்தின் பிரதிபிம்பம் ஆகும். (பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 1, பக்கம் 62)

ஹஸ்ரத் வாக்களிக்ப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது நூல் இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் என்பதில் சீர்திருத்தத்திற்கு மூன்று வழிகளை எடுத்துரைத்துள்ளார்கள். அவற்றில் முதல் வழியாக அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

நாகரீகமற்ற, காட்டுவாசிகளை இந்த எளிய ஒழுக்கத்தின்படி அதாவது உண்பது, பருகுவது, திருமணம் முடிப்பது போன்ற சமுதாய விஷயங்களில் மனிதத் தன்மையின் வழிகளைப் பின்பற்ற செய்ய வேண்டும். நிர்வாணமாக இருக்கக் கூடாது. மேலும் வேறோவது ஒழுக்கமின்மையை வெளிப்படுத்தக் கூடாது. இது இயல்பான நிலையின் சீர்திருத்தத்தில் எளிமையான சீர்திருத்தமாகும். இது எப்படிப்பட்ட சீர்திருத்தம் என்றால், போர்ட் பிளேயர் பகுதியின் காட்டுவாசிகளில் ஒரு மனிதனுக்கு மனிதத் தன்மையின் கடமைகளை கற்பிக்க வேண்டுமென்றால், முதலில் சிறிய, சிறிய மனித நல்லொழுக்கத்தை, மரியாதைகளுக்கான வழிகளையும் அவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். (இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம்)

நமது அன்பிற்குரிய தலைவர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா காத்தமுன் நபிய்யீன் (ஸல்) அவர்கள் அரபு நாட்டின் வனாந்திரப் பகுதியில் எந்தவொரு மகத்தான புரட்சியை ஏற்படுத்தினார்களோ அதன் அடிப்படையை மனிதனிடம் ஒழுக்கங்கள் மற்றும் மரியாதைகளின் மூலமாகவே ஏற்படுத்தினார்கள்.

இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த முழுமையான சீர்திருத்தம் அன்னாருடனேயே தொடர்புடையதாக இருந்தது. அதாவது, அன்னார் (ஸல்) ஒரு காட்டுமிராண்டித்தனமான சமுதாயத்திற்கு, மிருகத்தனமான பண்புகளை கொண்டவர்களுக்கு மனித பழக்க வழக்கங்களை கற்றுக் கொடுத்தார்கள். வேறு சொற்களில் கூறுவதாயின் விலங்குகளை மனிதர்களாக்கினார்கள். பிறகு மனிதர்களை பண்பட்ட மனிதர்களாக்கினார்கள். பின்னர் பண்பட்ட மனிதர்களை இறைவனுடன் தொடர்புடைய மனிதர்களாக்கினார்கள். மேலும் ஆன்மிக நிலையை அவர்களிடம் ஊதினார்கள். உண்மையான இறைவனுடன் அவர்களுக்கு தொடர்பை ஏற்படுத்தினார்கள். (லெக்சர் ஸியால் கோட்)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உலகில் தோன்றிய காலகட்டம் எப்படிப்பட்ட காலகட்டமாக இருந்தது என்றால், அதன் நிலையை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

ظہر الفساد فی البر و البحر

(அர்ரோம்:42))

பொருள்: ஒழுக்கங்கள் ரீதியாகவும், ஆன்மிக ரீதியாகவும், அனைத்து வகையிலும் மனித இனத்தின் நிலை மிகவும் மோசத்திலும் மோசமாக இருந்தது. குழப்பம் நிறைந்து இருந்தது. மனிதனது நிலை மரணித்ததைப் போன்று இருந்தது. இப்படிப்பட்ட நிலையில் ரஸூல் (ஸல்) அவர்களின் தோற்றத்தின் நோக்கத்தை எடுத்துரைத்தவாறு அல்லாஹ் எடுத்துரைத்துகின்றான்:

اِعلموا انّ اللہ یُحی الارض بعد موتہا

(அல் ஹதீது: 18)

அதாவது அல்லாஹ் பூமியை அது மரணித்த பின்னர் புதிதாக படைக்க உள்ளான்.

ஆக, ரஸூல் (ஸல்) அவர்கள் எப்படிப்பட்ட காலத்தில் தோன்றினார்கள் என்றால், அரபு மக்கள் மனித ஒழுக்கங்களை முற்றிலும் அறியாதவர்களாக இருந்தார்கள். எனவேதான் அல்லாஹ் அவர்களைப் பற்றி

اولئک کالانعام بل ھم اضل

என்று கூறுகின்றான். அதாவது அவர்கள் விலங்குகளைப் போன்று மாறாக, அதை விட மோசமான வழிகெட்ட நிலையில் இருந்தார்கள். (அல் அஃராஃப்: 180)

இப்படிப்பட்ட நிலையிலிருந்து மக்களை உயர்த்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களை எந்த இடத்திற்கு கொண்டு சேர்த்தார்கள் என்றால், அவர்கள் வெறும் மனித ஒழுக்கங்களை மட்டும் கற்கவில்லை. மாறாக, அவர்கள் ஒழுக்கத்தின் உயர்ந்த அந்தஸ்தை பெற்றார்கள். பின்னர் ஆன்மிகத்தின் உயர்ந்த அந்தஸ்திலும் அவர்கள் நிலை பெற்றார்கள். எந்த அளவுக்கென்றால், அல்லாஹ் அவர்களுக்கு .

رضی اللہ عنہم ورضو عنہ

என்ற மகத்தான சான்றிதழை வழங்கினான். அதாவது அல்லாஹ் அவர்களிடம் மகிழ்ச்சி கொண்டான். மேலும், அவர்களும் அல்லாஹ்விடம் திருப்தி கொண்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அந்த மக்களுக்கு அமர்வது, மற்றும் ஏனைய நன்னடத்தைகளை கற்றுக் கொடுத்தார்கள். உண்பது, பருகுவது, மற்றும் விருந்து உபசரிப்பிற்கான ஒழுக்கங்களை கற்பித்தார்கள். மேலும், பிறரை சந்திப்பதற்கான மரியாதைகள், பெரியவர்கள் மற்றும் சான்றோர்களுக்கு செலுத்த வேண்டிய மரியாதைகள், பேசுதல் மற்றும் உரையாடுதலுக்கான மரியாதைகள், உறங்குதல் மற்றும் எழுதலுக்கான மரியாதைகள், ஆடை அணிவதற்கான மரியாதைகள், தூய்மைக்கான மரியாதைகள், நிக்காஹ் மற்றும் திருமணத்திற்கான மரியாதைகள், உறவினர்களின் உரிமைகள் மற்றும் மரியாதைகள், அண்டை வீட்டாருக்குரிய மரியாதைகள், வியாபாரம் மற்றும் அன்றாடப் பணிகளின் மரியாதைகள், கொடுக்கல் வாங்கலுக்கான மரியாதைகள், பயணத்திற்கான ஒழுக்கங்கள், ஒருவரது வீட்டினுள் செல்வதற்கான மரியாதைகள், வீட்டில் நுழைதல் மற்றும் வெளியேறுவதற்கான மரியாதைகள், நோயாளிகளை நலம் விசாரிப்பதற்கான மரியாதைகள், துக்கம் விசாரிப்பதற்கான மரியாதைகள், கஃபன் அணிவித்தல் மற்றும் அடக்கம் செய்தலுக்கான மரியாதைகள், இபாதத் மற்றும் துஆவிற்கான மரியாதைகள் என ஒவ்வொரு சிறிய சிறிய விஷயத்திலிருந்து பெரிய பெரிய விஷயங்கள் வரை அன்னார் (ஸல்) கற்றுக் கொடுத்தார்கள்.

எந்த அளவுக்கென்றால், கழிப்பிடத்தில் பேண வேண்டிய ஒழுக்கங்களையும் கற்றுக் கொடுத்துள்ளார்கள். மேலும் அன்னார் (ஸல்)

A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM

Dealers of Natural Precious & Semi-Precious Gemstones
TOONICE DEALERS OF PRECIOUS & SEMI PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953 toonicegems@gmail.com
Al-Nida GEMS
No. 1/83, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327 gemscertify22@gmail.com

இந்த ஒழுக்கங்களை எவ்வாறு கற்றுக் கொடுத்தார்கள் என்றால், அது உலகம் பின்பற்றத்தக்க ஒன்றாக ஆகிவிட்டது. மேலும் இறைத் தூதர் (ஸல்) அவர்கள், அந்த மக்களுக்கு இவ்வாறு சான்றிதழும் வழங்கியுள்ளார்கள்: اصحابی کالنجوم فبايهمُ

اقتديم اِهتديتم

பொருள்: எனது ஸஹாபிகள் விண்ணின் நட்சத்திரத்தைப் போன்றவர்கள் ஆவர். அவர்களில் எவரைப் பின்பற்றினாலும் நீங்கள் நேர்வழியினை பெற்றுவிடலாம்.

(ஜாமிவுல் பயானுல் இல்ம் வ ஃபஸ்லிஹி)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதனை எவ்வளவு அழகாக கூறியுள்ளார்கள்!

صادفتهم قوما كروث ذلةً
فجعلتهم كسبيقة العقيان

பொருள்: நீர் அவர்களை சாணம் போன்று இழிவாக கண்டீர்கள். பின்னர் அவர்களை தங்கக்கட்டிகளாக மாற்றினீர்கள்.

வாருங்கள்! தற்போது இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தோற்றுனர் நமக்கு கற்றுத் தந்துள்ள அந்த ஒழுக்கங்களை மேலோட்டமாக காண்போம்.

**உண்ணுதல் மற்றும் பருகுதலுக்கான ஒழுங்குகள்**

முதலாவதாக உண்ணுதல் மற்றும் பருகுதல் தொடர்பான ஒழுங்குகளை பற்றி காண்போம்! உணவு மனித வாழ்வின் ஒரு முக்கியமான பகுதியாகும். எங்கு உணவு மனிதனுடைய உடல் வளர்ச்சிக்கு அடிப்படையான பணியை செய்கின்றதோ அங்கு மனிதனுடைய ஒழுக்கத்திலும் உணவின் ஒரு பெரிய மற்றும் உறுதியான தாக்கமும் ஏற்படும். இந்த உண்மையை கவனத்தில் கொண்டவாறு இஸ்லாமிய ஒழுக்கங்களில் எவ்வாறு உண்ண வேண்டும்? என்று மட்டும் கூறப்படவில்லை. மாறாக, நாம் எப்படிப்பட்ட உணவை உண்ண வேண்டும் என்பதும் கூறப்பட்டுள்ளது.

அல்லாஹ் கூறுகின்றான்:

كُلوا من طيبٰتِ مَا رَزَقنٰكُم

பொருள்: நாம் உமக்கு வழங்கிய உணவிலிருந்து தூய்மையானவற்றை உண்ணுங்கள். (அல்பக்கரா: 173)

மேலும் கூறுகின்றான்:

كُلوا مما فى الارض حلٰلاً طيباً

பொருள்: மக்களே! பூமியில் ஹலாலாகவும், தூய்மையானவையாகவும் உள்ளவற்றை உண்ணுங்கள். (அல்பக்கரா: 169)

ஹலால் மற்றும் ஹராமிற்கு விளக்கமளித்த பின்னரும் அல்லாஹ் அந்த விளக்கத்தில் தூய்மையான பொருளை உண்ணுமாறு வலியுறுத்தியுள்ளான். தூய்மையானவற்றில், மனிதனுடைய உடல் வளர்ச்சிக்கு பயன் தருவதுடன் அவனுடைய ஒழுக்கம் மற்றும் ஆன்மிக முன்னேற்றத்திற்கும் காரணமாக அமையும் ஒவ்வொரு ஹலாலான பொருளும் அடங்கும். இதுவே நாம் என்ன உண்ண வேண்டும்? என வழிகாட்டக் கூடிய அடிப்படை விஷயமாகும்.

அடுத்து, உணவு உண்ணும் முன் கை கழுவுதல், தூய்மையான பாத்திரத்தில் உணவு உண்ணுதல், அல்லாஹ்வின் பெயரை கூறி

بسم الله علىٰ بر كة الله

என்று கூறி துவங்க வேண்டும். மேலும் உணவு உண்ட பின்னர் الحمد لله الذى اطعمنا و سقانا و جعلنا من المسلمين என்று கூற வேண்டும். உணவு உண்ட பின்னர் வாய் கொப்பளிக்க வேண்டும். கை மற்றும் பாத்திரத்தை சுத்தப்படுத்த வேண்டும். இவை எப்படிப்பட்ட ஒழுங்குமுறைகள் என்றால் இதனை ஒவ்வொருவரும் அறிந்திருக்கின்றோம். மேலும் செயல்படுத்தவும் செய்கின்றோம். எனவே உடல் ஆரோக்கியத்திற்கான இந்த போதனைகள் தொடர்பாக ஆதாரம் வழங்க தேவையில்லை.

உண்ணக் கூடிய அல்லது பருகக் கூடிய பொருளை கையால் பிடிப்பதற்கு வலது கையை பயன்படுத்துவது தூதருடைய சுன்னத் ஆகும். இது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கடுமையான வழிகாட்டலும் உள்ளது. கூறுகின்றார்கள்:

அல்லாஹ் இரண்டு கைகளை வழங்கியுள்ளான். அதில் எந்த கையில் உண்டாலும், எவ்வித பிரச்சனையும் இல்லை என்று சிலர் கூறுகின்றார்கள். அப்படிப்பட்ட மக்கள் எந்த கையினால் கழிவறையில் அசுத்தத்தை தூய்மை செய்கின்றார்களோ அதே கையினால் உணவு உண்பதை மனித இயல்பு ஏற்றுக் கொள்ளுமா? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்! உண்பதற்கு, பருகுவதற்கு வலது கைக்கு உதவியாக பயன்படுத்துவதில் எவ்வித ஒழுக்கமின்மையும் இல்லை.

அல்லாஹ் வழங்கியுள்ள உணவிற்கு கண்ணியமளிப்பதும் அவசியமாகும். சிலர் படுத்துக் கொண்டே அல்லது சாய்ந்தவாறு உணவை உண்கின்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சாய்ந்து கொண்டு உணவு உண்பதை தடுத்துள்ளார்கள். (புகாரி)

ஏனெனில், அது ஓர் ஆணவமான செயல் தோற்றமாகும். இந்த செயல் அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட உணவிற்கு அவமரியாதை செய்வதைப் போன்றதாகும். சிலர் வயிறு நிரம்ப உணவு உண்பார்கள். எந்த அளவுக்கு என்றால், ஏப்பம் விட ஆரம்பித்து விடுவார்கள். இது தொடர்பாக நினைவில் கொள்ள வேண்டும். நம்பிக்கையாளர் குறைவாக சாப்பிடக் கூடிய பண்பை கொண்டவராக இருப்பார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உணவு மிகக் குறைவான மற்றும் எளிய உணவாகவே இருக்கும். அன்னார் (ஸல்) கூறிவந்தார்கள்:

இரண்டு நபருடைய உணவு மூன்று நபருக்கும், மூன்று நபருடைய உணவு நான்கு நபர்களுக்கும் போதுமானதாகும். (முஸ்லிம்)

சில பகுதிகளில் மக்கள் திருமண சந்தர்ப்பத்தில் விருந்து, வலீமா போன்றவற்றில் மிக அதிகமாக விரயம் செய்கின்றார்கள். எந்த அளவுக்கு என்றால், சில சமயம் ஏழைகளும் வீண் விரயம் செய்து பொளாதார பிரச்சனையில் சிக்கிக் கொள்வார்கள். இஸ்லாம் ஒருபோதும் இதை நமக்கு கற்பிக்கவில்லை. மாறாக, தேவைக்கேற்ப உண்ணவும், பருகவும் செய்வதற்கு போதனை நல்குகின்றது. வீண்விரயம் செய்வதை முற்றிலும் தடுக்கின்றது. இது தொடர்பாக மிக முக்கியமான அடிப்படை வழிகாட்டல் என்பதாகும்.. كلوا واشربوا ولا تسرفوا

பொருள்: உண்ணுங்கள் ; பருகுங்கள்; வீண் விரயம் செய்யாதீர்கள். (அல்அஃராஃப்: 32)

தண்ணீர் மற்றும் பானங்கள் அருந்தும்போது, இந்த விஷயத்தை கவனத்தில் கொள்வது அவசியமாகும். அதாவது, பானம் அருந்தும் பாத்திரத்தை வலது கையால் பிடிக்க வேண்டும். தேவையின்றி நின்று குடிக்கக் கூடாது. ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஒட்டகத்தைப் போன்று ஒரே மூச்சில் குடிக்காதீர்கள்; மாறாக இரண்டு, மூன்று முறையாக நிறுத்தி, நிறுத்தி பருகுங்கள். (திர்மிதி) இவ்வாறு தண்ணீர் அருந்தும்போது பாத்திரத்தினுள் மூச்சு விடுவதையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள். (முஸ்லிம்)

நான் இந்த விஷயத்தையும் கூற விரும்புகின்றேன். அதாவது தண்ணீரை பயன்படுத்தும் ஒழுங்குமுறைகளில் ஒன்று தண்ணீரை வீணாக்கக் கூடாது என்பதும் ஆகும். இதில் மிக முக்கியமான ஒரு விஷயம் அடங்கியுள்ளது. இன்றைய நாட்களில் தண்ணீர் தட்டுப்பாடு உலகில் ஏற்பட்டு கொண்டிருக்கின்றது. தண்ணீர் தட்டுப்பாட்டினால் உலகம் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால், நமது அன்பிற்குரிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இன்றிலிருந்து சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்னர் நமக்கு தண்ணீரை வீண்விரயம் செய்வதிலிருந்து தவிரிந்து இருக்குமாறு வலியுறுத்தியுள்ளார்கள். ஒருமுறை ஒரு ஸஹாபி உளூ செய்யும் போது, தேவைக்கு அதிகமாக அவர் தண்ணீரை பயன்படுத்துவதை அன்னார் (ஸல்) கண்டார்கள். உடனே, தண்ணீரை வீணாக்காதீர்கள் ; நீங்கள் ஓடக் கூடிய நதியின் கரையில் இருந்தாலும் கூட என அவருக்கு அறிவுரை நல்கினார்கள். (முஸ்னது அஹ்மது பின் ஹன்பல்)

இது சிந்திக்க வேண்டிய இடமாகும். நதியில் மிக அதிகமான அளவில் தண்ணீர் இருக்கும். அங்கும் கூட தண்ணீரை விரையம் செய்யக் கூடாது என்று அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்றால் நமது வீடுகளிலும், ஏனைய இடங்களிலும் நாம் தண்ணீரை பயன்படுத்துவதில் எந்த அளவிற்கு சிக்கனத்தை கடைபிடிக்க வேண்டும்.

அடுத்து விருந்துகளின் மரியாதைகளில் ஒரு முக்கியமான விஷயம்


Proprietor off : 044- 2260 1886

RAZIK XEROX & TELECOM

AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX



- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 Thursday 10 JULY 2025 Issue No.28

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

என்னவென்றால், வசதி படைத்தவர்களை விருந்திற்கு அழைக்கும்போது, வசதி படைத்தவர்களுடன் ஏழைகளையும் விருந்திற்கு அழைக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: மிக மோசமான விருந்து எதுவென்றால், செல்வந்தர்கள் அழைக்கப்பட்டு ஏழைகள் தவிர்க்கப்படும் விருந்தாகும். (புஹாரீ)

இதேபோன்று ஓர் ஏழை ஒரு செல்வந்தரை விருந்திற்கு அழைத்தால் அவர் கட்டாயம் அந்த விருந்தில் கலந்து கொள்ள வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

لو دُعيتُ الی كراعٍ لَأُجبت

அதாவது ஓர் ஏழை ஆட்டின் கரண்டை கால் குளம்பு விருந்திற்கு அழைத்தாலும் நான் அந்த விருந்தை கட்டாயம் ஏற்றுக் கொள்வேன். (திர்மிதி)

விருந்தில் கலந்து கொள்பவர் தேவைக்கேற்ப உணவை வாங்க வேண்டும். இதன் மூலம் உணவு வீணாகாது. ஜல்ஸா ஸாலானா சந்தர்ப்பத்திலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் லங்கரிலிருந்து தயாரிக்கப்படும் உணவிலிருந்து நாம் பயன் பெறுகின்றோம். இந்த சந்தர்ப்பத்தில் நாம் உணவின் அந்த மரியாதைகளை நன்றாக நினைவில் கொண்டிருக்க வேண்டும். சாப்பிடுவதில் ஆசை கொள்வதற்கு பகரமாக பசி ஆற்றக் கூடிய அளவிற்கு உணவு உண்ண வேண்டும். உணவை விரையம் செய்வதிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். உணவு, பாத்திரம், உணவு உண்ணும் இடம், சுற்றுப்புறம் அனைத்தையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் இதுவே உண்பது பருகுவது தொடர்பாக உள்ள இஸ்லாமிய மரியாதைகளின் எதிர்பார்ப்புகள் ஆகும்.

**தூய்மைக்கான ஒழுங்குமுறைகள்**

அடுத்து தூய்மை தொடர்பாகவும் இஸ்லாமிய ஒழுக்கங்கள் இருக்கின்றன. தூய்மை பரிசுத்தத் தன்மையை யார் வெறுப்பார்கள்? அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

اِنَّ اللّٰهَ يُحِبُّ التَّوَّابِيْنَ وَيُحِبُّ
الْمُتَطَهِّرِيْنَ(سورة البقرہ آیت 223:)

பொருள்: அல்லாஹ் பாவமன்னிப்பு கோருபவர்களையும் நேசிக்கின்றான். வெளிப்புறத் தூய்மையை பேணக் கூடியவர்களையும் நேசிக்கின்றான். (அல்பக்கரா:223)

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இவ்வசனத்திலிருந்து அல்லாஹ் தவ்பா செய்யக் கூடியவர்களை தனது அன்பிற்குரியவர்களாக ஆக்குகின்றான் என்று மட்டும் கூறவில்லை. மாறாக, உண்மையான தவ்பா உடன் உண்மையான தூய்மையும், பரிசுத்தமும் நிபந்தனையாகும் என்றும் அல்லாஹ் கூறுகின்றான். எனவே எல்லாவிதமான அழுக்குகளிலிருந்தும், அசுத்ததிலிருந்தும் விலகியிருப்பது அவசியமாகும்.

(அல்ஹகம்: 17 செப்டம்பர், 1904)

மேலும், நீங்கள் உட்புறத் தூய்மையை அதாவது ஆன்மிக பரிசுத்தத்தை வேண்டுகின்றீர்கள் என்றால்,அதற்கு வெளிப்புற தூய்மையும் பரிசுத்தமும் நிபந்தனையாகும். வெளிப்புறத் தூய்மையும், பரிசுத்தமும் இல்லாமல் உட்புறத் தூய்மையும், பரிசுத்தமும் கிடைக்கப் பெறாது என்று இஸ்லாம் கூறுகின்றது.

இஸ்லாத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் முஹம்மது அரபி (ஸல்) அவர்கள் தூய்மையை ஈமானின் ஓர் அங்கமாக ஆக்கியுள்ளார்கள். அன்னார் (ஸல்) கூறுகின்றார்கள்:

اَلطُّهُوْرُ شَطْرُ الْاِيْمَانِ

(முஸ்லிம்)

மேலும் அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

وَثِيَابَكَ فَطَهِّرْ ۔ وَالرُّجْزَ فَاهْجُرْ

(அல்முத்தஸிர்: வசனம் 5,6)

அதாவது உங்களது ஆடைகளை தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள். உங்களது உடல், வீடு, தெரு, நீங்கள் வசிக்கக் கூடிய ஒவ்வோர் இடத்தையும் அழுக்கு மற்றும் அசுத்தத்திலிருந்து தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு மனிதரை பார்த்தார்கள். அவனது தலையை மற்றும் தாடியின் முடிகள் கலைந்து போயிருந்தன. அவரிடத்தில் நீங்கள் உங்களது தலை மற்றும் தாடியை சரி செய்யுங்கள் என்று கூறினார்கள். அவர் தலையின் முடியை சரிசெய்து விட்டு வந்தபோது, அழகிய தோற்றம் சிறந்ததா? அல்லது மனிதனது முடிகள் கலைந்து போய் அழுக்காக ஷைத்தானைப் போன்று தோற்றமளிப்பது சிறந்ததா?என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். (இமாம் மாலிக்)

அடுத்து, வீடுகள், தெருக்கள், பாதைகள் போன்றவற்றை தூய்மையாக வைப்பது தொடர்பாக இஸ்லாம் கட்டளையிட்டவாறு ஹதீஸில் வருகிறது.

பாதையில் முட்களோ, கற்களோ அல்லது ஏதாவது அசுத்தமான பொருளோ கிடந்தால் அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாமே எடுத்து அதனை ஒருபுறமாக அகற்றிவிடுவார்கள். மேலும் அன்னார் (ஸல்) கூறினார்கள்:

எவர் தெருக்களின் தூய்மையை கவனத்தில் கொள்வாரோ இறைவன் அவர் மீது மகிழ்ச்சி கொள்கின்றான். மேலும் அவருக்கு நற்கூலியும் வழங்குகின்றான். (முஸ்லிம்)

ஹஸ்ரத் அமீருல் முஃமீனீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

மூன்றாவது உலகின் நாடுகளில் பெரும்பாலான இடங்களில், வீடுகளின் குப்பைகளை எடுப்பதற்கு முறையான ஏற்பாடுகள் இல்லை. வீட்டிற்கு வெளியே அசுத்துங்களை எறிந்து விடுகின்றனர். சுற்றுப்புறத்தை தூய்மையாக வைப்பது எந்த அளவு முக்கியமானது என்றால், தனது வீட்டை தூய்மையாக வைப்பதைப் போன்று முக்கியமானதாகும். இல்லையென்றால், மக்கள் அந்த அசுத்தங்களை வெளியில் எறிந்து சுற்றுப்புறத்தை அசுத்தமாக்கி கொண்டிருப்பார்கள். மேலும் சுற்றுப்புறத்தில் நோய்கள் உருவாகுவதற்கு காரணமாக அந்த குப்பைகள் ஆகிக் கொண்டிருக்கும்.எனவே அஹ்மதிகள் இதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். வீட்டிற்கு வெளியில் அசுத்தம் தெரியாத அளவிற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும். (குத்பா ஜுமுஆ, ஏப்ரல் 23, 2004)

அடுத்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) பற்களை தூய்மையாக வைப்பது தொடர்பாக கூறுகின்றார்கள்:

எனக்கு மக்களுக்கு கடினமாகி விடும் என்ற அச்சம் இல்லாமல் இருந்திருந்தால் நான் அவர்களுக்கு ஒவ்வொரு தொழுகைக்கு முன்னரும் மிஸ்வாக் (பல் துலக்குதல்) செய்வதற்கு கட்டளையிட்டிருப்பேன். (புகாரீ)

ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: ஓர் ஆய்வு இதையும் கூறுகிறது: அதாவது மனிதன்

இதன் தொடர்ச்சி. 9-ம் பக்கம் ......

**National Watch Company**
**Sales & Service**

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad